GOKULAM

கோகுலம்

செப்டம்பர் 2004

ரூ.6/-



ஜெயசூர்யா
போஸ்டர்
உள்ளே...

அன்பு ஆசிரியருக்கு...

SEMAS

Academy of Excellence

Japanese - Abacus & Mental Arithmetic



>> Soroban Kids >> Soroban Flash >> Mastering Soroban >> Senior Soroban

ツムセ

ツムセ

Join in SEMAS

This year Fly to Taiwan

National Competition on 22nd Aug. 2004 at Chennai

International Competition 25th Dec. 2004 at Taiwan

Organizing by Taiwan Chamber of Commerce

ISO-9001:2000 Certified

BEWARE

SEMAS only offering Japanese Abacus & Mental Arithmetic System in India

This is a legal information for PUBLIC awareness

SEMAS Unique in Abacus Education. How?

Advance and Entire concept of Abacus education and its Brain development Techniques as it is in Japan!

Unique syllabus for all age groups from 3 years old onwards!

Unique syllabus to teach all the Arithmetic sums with in 3-months of practice!

Highly structured syllabus, even Master Level finished students from other institutions also can Join to continue further!!

SEMAS solicits GLOBAL FRANCHISEE

Corporate Office SEMAS Pvt. Ltd.
545, 14th Street, 4th Sector, K.K. Nagar, Chennai - 600 078.
Ph.: 24722550, 24722505, Fax : 24801083
www.semasindia.com Email : info@semasindia.com
www.semasacademy.com

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com


சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

**Bharathan Publications
Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.


குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்











செப்டெம்பர் 2004 மலர் : 22 இதழ் : 8

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்

செய்தி நேரம்

17 ஆயிரம் அடி உயரத்தில் ரயில் பாதை!

'உலகின் கூரை' என்று அழைக்கப்படும் திபெத் பீட பூமியில் ரயில் பாதை அமைத்து சாதனை படைத்து வருகிறது சீனா. சீனாவில் உள்ள கோல்மட் என்ற இடத்தில் இருந்து திபெத்தில் உள்ள லாசா வரை 17 ஆயிரம் அடி உயரத்தில் 100 கி.மீட்டர் தொலைவுக்கு இந்தப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதை அமைக்க சீன அரசு செலவழித்துள்ள மொத்தத் தொகை 9 ஆயிரம் கோடி ரூபாய். இந்த ரயில் பாதை அமைக்க ஒரு லட்சம் தொழிலாளர்கள் இரவு பகலாக வேலை செய்து வருகின்றனர். 2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தப் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது. 2007 ஆம் ஆண்டு முதல் இந்தப் பாதையில் ரயில்கள் இயக்கப்படும்.

புதன் ஆராய்ச்சி!

சூரியனுக்கு மிக அருகில் உள்ள புதன் கிரகத்தை ஆராய அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் மெசஞ்சர் என்ற செயற்கைக் கோளைத் தயாரித்து உள்ளனர். ஏறக்குறைய பூமியின் அளவுடைய புதன் கிரகத்தில் மறைந்து கிடக்கக் கூடிய மர்மங்களை மெசஞ்சர் செயற்கைக் கோள் ஆராய இருக்கிறது. புதனின் சுற்று வட்டப் பாதையில் ஓராண்டுக்கும் மேலாக தங்கி மெசஞ்சர் ஆராய உள்ளது.


நீருக்கு அடியில் ரோபாட்!

கடல் வாழ் உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சிக்குப் பயன்படுத்த நீருக்கு அடியில் இயங்கும் ரோபாட்களை சீன

"ஏண்டா, அந்த கிளாஸ் மிஸ் மட்டும் எப்பவும் கூலிங் கிளாஸ் போட்டிருக்காங்க?"

"அவங்க கிளாஸ் பசங்க எல்லோரும் ரொம்ப பிரைட் ஆக இருக்கிறாங்களாம்!"

- கே. செந்தமிழ்ச்செல்வி






"பனை மரத்தின் கீழ் நின்று பாலைக் குடித்தாலும்..."

"உடம்புக்கு நல்லதுதான் சார்!"

- அனுராதா ராஜப்பா



* மெசஞ்சர்

விஞ்ஞானிகள் உரு வாக்கியுள்ளனர். ரிமோட் கட்டுப்பாட்டில் இயங்கும் இந்த ரோபாட் கடலில் 3 ஆயிரத்து 500 மீட்டர் ஆழத்தில் இயங்கக் கூடியது. இதில் ஒரு கண்காணிக்கும் கருவியும் 5 வீடியோ கேமராக்களும் நீருக்கு அடியில் இயங்கும் 6 விளக்குகளும் உயிரினங்களைக் கண்காணிக்கும் கருவி ஒன்றும் பொருத்தப் பட்டுள்ளன. நீரில் நடக்கக் கூடிய இந்த ரோபாட் 3½ கி.மீ ஆழத்தை 30 நிமிடங்களில் அடையும்

கல்பனா சாவ்லா நினைவாக..



* கல்பனா சாவ்லா

இந்தியாவைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா நினைவாக புதிதாகத் தயாரித்துள்ள சூப்பர் கம்ப்யூட்டருக்கு நாசா அவர் பெயரைச் சூட்டியுள்ளது. கடந்த ஆண்டு பிப்ரவரியில் கல்பனா உள்ளிட்ட 7 விண்வெளி வீரர்களும் கொலம்பியா ஓடத்தில் பூமிக்குத் திரும்பும்போது ஓடம் வெடித்துச் சிதறியது. இந்த சூப்பர் கம்ப்யூட்டர்கள் பூமியின் தட்ப வெப்ப மாற்றங்கள், அதன் பரிணாம வளர்ச்சியை அறிந்து கொள்ள உதவும் மாதிரி பயிற்சிக் கருவிகளை உருவாக்கப் பயன்படுகின்றன.

ஜோக்ஸ் கார்னர்

"வெளியே 'உத்தரவு இன்றி உள்ளே வரக்கூடாது'ன்னு போர்டு வச்சிருக்குதே- அப்புறம் ஏன் உள்ளே வந்தீங்க?"

"'உத்தரவு' வாங்கத்தாங்க உள்ளே வந்தேன்!"

- துரை. முருகேசன்





"என்னோட கடிகாரம் சந்தோஷமா இருக்குடா!"

"எப்படிடா சொல்றே?"

"சந்தோஷத்தில் சின்ன முள்ளும் ஓடல; பெரிய முள்ளும் ஓடலையே!"

- ஆர். அம்பிகா

சீக்கூவின்



செண்பகவனத்தின் செல்லப் பிள்ளையான சீக்கூ முயலுக்குக் காட்டில் ஆடிப் பாடி, சுற்றித் திரிவது என்றால் கொள்ளை விருப்பம். காலாண்டு விடுமுறைக்குப் பக்கத்து காட்டில் வசிக்கும் தன் தாத்தா, பாட்டி வீட்டுக்குச் செல்ல விரும்பியது. தன் பெற்றோரிடம் போய், "அப்பா, நான் பாட்டி வீட்டுக்குப் போய் என் விடுமுறையைக் கழித்து விட்டு வருகிறேன்" என்றது.

பெற்றோர் உடனே சம்மதித்த மகிழ்ச்சியில் குதித்தபடி விலங்குகளின் ஸ்பெஷல் ரயில் நிலையம் சென்றது. அன்றைக்குப் பார்த்து ரயில் சரியான நேரத்துக்கு வந்து விட்டது. ஆனால் பயங்கர கூட்டம். ஏதோ ஒரு பெட்டியில் அடித்து பிடித்து உள்ளே நுழைந்துவிட்டது. உள்ளே பார்த்தால், ஜம்பு யானை, ஒரு சீட்டில் முழுவதுமாக ஆக்கிரமித்து உட்கார்ந்திருந்தது. இன்னொரு சீட்டில் அது தன் லக்கேஜ்களை எல்லாம் பரப்பி வைத்திருந்தது. சீக்கூவோ நெரிசலில் நிற்கக் கூட முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தது.

"யானையாரே, கொஞ்சம் இந்த லக்கேஜ்களை எடுத்து மேலே போட்டுவிட்டால் ஒரு பத்துப் பேராவது உட்காரலாம் அல்லவா?" என்று பணிவோடு கேட்டது சீக்கூ. "இந்த இடத்தை என் ஃப்ரெண்டுக்காக ரிசர்வ் பண்ணி வெச்சிருக்கேன். நீ இடத்தைக் காலி பண்ணு" என்றது ஜம்பு அதிகாரமாக. உடனே அமைதியாகப் போய்விட்டது சீக்கூ.

அரை மணி நேரமானது. சீக்கூ

தைரியம்!

✪ எஸ்.ஷோபன் ✪



ஒலிம்பிக் க்விஸ் – போட்டி முடிவு


ஒலிம்பிக் க்விஸ் போட்டி சற்று கடினமாகவே இருந்திருக்கிறது. நிறையப் பேர் ஒன்று, இரண்டு தவறுகளைச் செய்திருந்தனர். சரியான விடையளித்து, சிறப்பான ஸ்லோகன் அடிப்படையில் பரிசுக்குரியவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

சரியான விடைகள்:

1. நவீன ஒலிம்பிக் போட்டியின் தந்தை பியரி டிகூபர்டின்.

2. ஒலிம்பிக் கொடி 1920 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

3. 1928 ஆம் ஆண்டு ஒலிம்பிக் ஜோதி ஆம்ஸ்டர்டாம் ஒலிம்பிக் போட்டியில் ஏற்றப்பட்டது.



4. 1928 ஆம் ஆண்டு இந்திய ஹாக்கி அணி ஒலிம்பிக்கில் தங்கம் வென்றது. அதன் கேப்டன் ஜெய்பால்சிங்.

5. சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்காவின் மரியான் ஜோன்ஸ் 5 பதக்கங்கள் பெற்றார்.

6. மாரத்தான் போட்டியின் தூரம் 42.195 மீட்டர்.

7. இந்திய ஒலிம்பிக் அசோஷியேஷன் துவக்கப்பட்ட ஆண்டு 1927.

8. 1900 - பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் பெண்கள் சேர்க்கப்பட்டனர்.

9. அட்லாண்டா ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்குப் பதக்கம் வாங்கித் தந்த டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ்.

10. 1916, 1940, 1944 ஆம் ஆண்டுகளில் உலகப் போர்களால் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை.

11. 1984 - லாஸ் ஏஞ்சல்ஸ்

12. 1988 - சியோல்

13. 1992 - பார்சிலோனா

14. 1996 - அட்லாண்டா

15. 2000 - சிட்னி

16. ஒலிம்பிக் போட்டியை உருவாக்கியவர்கள் எகிப்தியர்கள். தவறு.

17. ஒலிம்பிக்கில் வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பை வழங்கப்படுகிறது. தவறு.

18. பழைய ஒலிம்பிக் போட்டிகளில் ஓட்டப் பந்தைய வீரர்கள் பாவாடை அணிந்து ஓடினர். தவறு

19. ஒலிம்பிக்கின் நோக்கங்களில் ஒன்று வலிமை. சரி

20. பழைய ஒலிம்பிக்கில் தொடர்புடைய கடவுள் ஏதென்னா . தவறு.

பரிசு பெற்றவர்கள்

தங்கப் பதக்கம் - ஆர். சந்தோஷ்ராஜ், காஞ்சிபுரம்.

வெள்ளிப்பதக்கம் எஸ். மீனாட்சிசுந்தரம், ஆழ்வார்க்குறிச்சி, திருநெல் வேலி மாவட்டம்.

வெண்கலப் பதக்கம்: பெ. கோவிந்தராஜ், பாணான் குளம், விருதுநகர் மாவட்டம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

வுக்கு கால்கள் வலித்தன. ஜம்பு சொன்ன அவன் நண்பனும் வரவில்லை.


"உங்க ஃப்ரெண்டுதான் வரலையே, இப்பவாவது அந்த லக்கேஜ்களை எடுக்கலாமில்ல?" என்றது மீண்டும் ஜம்புவை பார்த்து சீக்கூ.

ஆனால் இம்முறை ஜம்பு வாயைத் திறக்கவே இல்லை. ஒரு முறை முறைத்தது. உடனே சீக்கூவுக்குக் கோபம் வந்தது. சீட்டில் இருந்த ஜம்புவின் லக்கேஜ்களை ரயிலுக்கு வெளியே வீசியது.

"அட முட்டாள் முயலே, என்ன தைரியம் உனக்கு? என் ஃப்ரெண்டோட லக்கேஜை தூக்கி வீசிட்டியே, மரியாதையா அதை எடுத்துட்டு வா" என்று கத்தியது. ஆனால் சீக்கூ அலட்டிக் கொள்ளவே இல்லை.

"உன் ஃப்ரெண்ட் இருந்த ஸ்டேஷனிலேயே அதைத் தூக்கி எறிஞ்சிட்டேன். உனக்கு அந்தக் கவலை வேண்டாம்" என்று அழுத்தமாகச் சொன்னது சீக்கூ. பின்னர் ஜம்புவை சட்டை செய்யாமல், ஜம்மென்று அதற்கு எதிரில் உட்கார்ந்தது.

ரயிலில் வந்த மற்ற பிராணிகள் சீக்கூ சொல்வதுதான் நியாயம் என்று சொல்லவும், எதுவும் பேச முடியாமல் அமைதியாகிவிட்டது ஜம்பு.



இந்தியப் படிப்பும்... வெளிநாட்டு வேலையும்...

விவாத மேடை

ப்ரியாவும் விவேக்கும் மரத்தடியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தனர். அங்கு அரவிந்த் வந்து சேர்ந்தான்.

"என்னடா அரவிந்த் நேற்று திடீர்னு லீவு போட்டுட்டே?"

"எங்க அண்ணன் அமெரிக்காவுல இருந்து வர்றார்னு சொன்னேனே மறந்துட்டியா? நீயும் ப்ரியாவும் ஆளுக்கொரு கீ செயின் வச்சிக்குங்க."

"தேங்க்ஸ் அரவிந்த்" என்றனர் இருவரும்.

"அமெரிக்கா ரொம்பப் பிரமாதமாக இருக்காம். எல்லோருக்கும் கார், பெரிய வீடு, சனி, ஞாயிறுகளில் உல்லாசப் பயணம் என ரொம்ப ஜாலியான வாழ்க்கை. நிறைய சம்பளம்... நானும் படிச்சிட்டு அமெரிக்காவுல போய் செட்டில் ஆகிடுவேன்" என்றான் அரவிந்த்.

"என்ன அரவிந்த் இப்படி பேசறே? உங்க அண்ணன்தான் வெளிநாடு போயிட்டார்ன்னா, நீயாவது நம்ம நாட்டில் வேலை செய்யக் கூடாதா?" என்றாள் ப்ரியா.

"இதுல என்ன தப்பு ப்ரியா? எங்க அண்ணன் நல்லா படிச்சார். அவர் படிப்புக்கு ஏற்ற நல்ல வேலையும் சம்பளமும் இங்கே கிடைக்கலை. கிடைக்கிற இடத்துல வேலை செய்யறார். நம்ம நல்லா இருக்கணும்ங்கிறதுக்காகத்தானே கஷ்டப்பட்டு படிக்கிறோம்?" - அரவிந்த்.

"உங்க அண்ணன் நல்லா படிச்சார். அவருடைய புத்திசாலித்தனத்தை நம்ம நாட்டுக்குப் பயன் படுத்தலாமே? படிப்பெல்லாம் நம்ம நாடு தான் கொடுக்குது. அதனுடைய பலன் மட்டும் இன்னொரு இடத்துக்கா?" என்றான் விவேக்.



"இப்ப வேணா இப்படி பேசுவீங்க. நீங்களும் படிச்சு முடிச்சா வெளிநாடுதான் போவீங்க..." என்றான் எரிச்சலுடன் அரவிந்த்.

"இல்ல அரவிந்த. படிக்கிறவங்களோட கடமை பணம் சம்பாதிக்கறது மட்டுமில்லை; இந்த நாட்டுக்கு, இந்தச் சமுதாயத்துக்கு ஏதாவது ஒரு விதத்துல பங்களிப்பு செலுத்தறதும் நம்முடைய கடமைதான். நான் நம்ம நாட்டுல எந்த இடத்துல வேலை செய்யச் சொன்னாலும் செய்வேன். இதுதான் என் பாலிசி" என்றாள் ப்ரியா.

"அரவிந்த், நான் படிச்சு சொந்தமாகத் தொழில் தொடங்கி நிறையப் பேருக்கு வேலை கொடுப்பேன். இங்கே சம்பாதிச்சு, இங்கேயே முதலீடு செய்து நிம்மதியா இருப்பேன்" என்றான் விவேக்.

"நீங்க ரெண்டு பேரும் பிழைக்கத் தெரியாதவங்க. அவ்வளவுதான் நான் சொல்வேன்" என்றபடி கிளம்பிச் சென்றான் அரவிந்த்.

- தம்பிப்பயல்

நண்பர்களே, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? எழுதி அனுப்புங்கள்.


டால்மியாபுரம் பள்ளிகள் ஸ்பெஷல்!



அக்டோபர் கோகுலம் திருச்சி மாவட்டத்திலுள்ள டால்மியாபுரம் நகரப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களின் ஸ்பெஷலாக வெளி வர உள்ளது.

இடம் பெறும் பள்ளிகள்

1. *டால்மியா மேல்நிலைப் பள்ளி, டால்மியாபுரம்*
2. *சரஸ்வதி வித்யாலயா துவக்கப் பள்ளி, கள்ளக்குடி - 2*



பேசும் மரம்!

ஹாய் ஃபிரெண்ட்ஸ்

நான் உங்கள் தெருக் கோடியில் தனியாக நிற்கும் வேப்பமரம் பேசறேன். நீங்கள் நலமாக இருப்பீர்கள்! ஆனால் எங்கள் இனம் நலமாக இல்லை. நீங்கள் மரங்களை வெட்டி விறகாக, கட்டடம் கட்ட, காகிதம் தயாரிக்க, மரச் சாமான்கள் செய்ய... என பல்வேறு விதங்களில் பயன்படுத்துகிறீர்கள்.

பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் காகம் ஒன்று வேப்பம் பழத்தைச் சாப்பிட்டு விட்டு, கொட்டையை இந்த இடத்தில் போட்டது. அதிலிருந்து நான் முளைத்தேன். மழை, சூரியனின் உதவியால் செடியாகி, பெரிய மரமானேன்.


என் மரத்தில் உள்ள பூக்களும், காய்களும் என்னை மேலும் அழகாக காட்டுகின்றன. பூக்களைத் தேடி பூச்சிகளும், பழங்களைத் தேடி பிராணிகளும் பறவைகளும் வந்து செல்கின்றன. இதமான காற்றை சுவாசித்துக் கொண்டு மனிதர்களும் என் நிழலில் இளைப்பாறுகின்றனர்.

நான் பகல் நேரத்தில் உணவு தயாரிக்கும்போது கார்பன் டை ஆக்ஸைடை உள் இழுத்து, ஆக்ஸிஜனை வெளியிடுகிறேன். இதன் மூலம் உங்களுக்குத் தூய்மையான காற்று கிடைக்கிறது. மழை வளத்தைப் பெருக்க, மண் சரிவைத் தடுக்க, மண் வளத்தைக் காக்க மரங்களாகிய எங்களின் சேவை இவ்வுலகிற்குத் தேவை என்பதை நீங்கள் இப்பொழுதாவது புரிந்து செயல்படுங்கள். பட்ட மரங்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் கழித்து பூமியில் எண்ணெய் வளத்தைக் கொடுக்கின்றன. இந்த விஷயங்கள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்தாலும் தெரியாதவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்!

மரங்களை நடுங்கள்;
மரங்களைக்
காப்பாற்றுங்கள்!



y cutting of trees and increasing pollution is fast disturbing the
ture's balance. So, plant new trees and save Mother Nature.



Petroleum Conservation Research Association
Sanrakshan Bhawan, 10, Bhikaji Cama Place, New Delhi 110066.


Write a slogan on Forest Conservation and Win Prizes.

Mercantile

ஆஹா ஆமைகள்!

வண்ணத் தூரிகை முடிவு

ஆகஸ்ட் இதழில் 'ஆமை' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...




முதல் பரிசு:
ஆ. ப்ரீத்தி,
ஒன்பதாம் வகுப்பு,
அல்வேர்னியா
மெட்ரிகுலேஷன்
பள்ளி, கோவை



மூன்றாம் பரிசு
தி. தீப்தி திவ்யா,
ஏழாம் வகுப்பு,
தேனி மெட்ரிக் பள்ளி,
பழநி



இரண்டாம் பரிசு
கா. முகமது அலி ஜின்னா,
இராமநாதபுரம்



ஆறுதல் பரிசு
செ. ஹரிதா,
ஏழாம் வகுப்பு,
தேனி மெட்ரிக் பள்ளி, பழநி



ஆறுதல் பரிசு
சு. கோபிநாத், நான்காம் வகுப்பு,
சர்வசேவா தொடக்கப் பள்ளி,
அய்யனார்புரம், திண்டுக்கல்


3 எச்சரிக்கைகள்! 300 தங்கக் காசுகள்!
கதை: ஆர். சாரதா
படம்: மகேஸ்
மன்னர் மார்த்தாண்டம் சிறந்த முறையில் ஆட்சி செய்து வந்தார். ஒரு நாள்-
வணக்கம் அரசே! என் பெயர் முருகன். நான் மிகவும் ஏழை. என் மகள் திருமணத்துக்குப் பணம் வேண்டும்.
எவ்வளவு வேண்டும்?
அடுத்த ஒரு வாரத்துக்கு உங்கள் எதிர்காலம் எப்படி இருக்குமென்று எனக்குத் தெரியும். மூன்று எச்சரிக்கைகள் தருகிறேன். முந்நூறு தங்கக் காசுகள் கொடுங்கள்.
மன்னரும் ஏற்றுக் கொண்டு, தங்கக் காசுகளைக் கொடுத்து அனுப்பினார்.
அன்று இரவு மன்னர் முருகன் சொன்னதை நினைத்துப் பார்த்தார்.
அரசர் எப்பொழுதும் விழிப்புடன் செயல்பட வேண்டும். இது முதல் எச்சரிக்கை. சரி, இன்று நகர்வலம் செல்லலாம்.
மன்னர் மாறுவேடத்தில் நகர்வலம் சென்றார். அப்போது -
ஐயோ... எங்கள் ராஜா பாம்பு கடித்து இறக்கப் போகிறார்! தங்கமானவருக்கு இப்படியா?
மறுநாள் -
பகைவனை நண்பனாக எண்ண வேண்டும் என்பது இரண்டாவது எச்சரிக்கை. இப்போது பாம்புதான் எனக்கு எதிரி.


யாரங்கே? என் அறையைச் சுற்றி வாசனை மலர்கள், பழங்கள், பால், தேன் எல்லாம் நிரப்பி வையுங்கள்.
உத்தரவு மன்னா.
அன்று இரவு நாகம் மன்னரின் அறைக்குள் நுழைந்தது.
ம்... பகைவனையும் நண்பனாக நினைக்கும் மன்னனைத் தீண்டக் கூடாது.
இரண்டு நாட்களில் மன்னருக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது.
அரசே, இந்த மருந்தைச் சாப்பிடுங்கள்.
இவர் கை ஏன் நடுங்குகிறது? 'எது செய்தாலும் யோசித்து செய்'. இது மூன்றாவது எச்சரிக்கையாச்சே!
இது மருந்தா, விஷமா?
மன்னா, என்னை மன்னித்து விடுங்கள். பணத்துக்கு ஆசைப்பட்டு மந்திரி சொன்னதைச் செய்துவிட்டேன்.
மந்திரி நாடு கடத்தப்பட்டார். சில நாட்களில் குணமடைந்த மன்னர் முருகனை வரவழைத்தார்.
முருகா, உன்னால்தான் இன்று உயிரோடு இருக்கிறேன். இனி நீதான் என் மந்திரி.
நன்றி மன்னா!

ஆசிய சாம்பியன் இலங்கை!

விளையாட்டு உலகம்

ஆசியக் கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் இலங்கையில் நடைபெற்றன. இதன் இறுதிப் போட்டியில் இந்தியாவும் இலங்கையும்



• இலங்கை அணி

மோதின. முதலில் பேட் செய்த இலங்கை அணி 228 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. முதல் இரண்டு விக்கெட்டுகள் வேகமாக வீழ்ந்தன. அடுத்து வந்த கேப்டன் அட்டபட்டு, சங்கக்காரா ஆகியோர் நிதானமாக விளையாடி ரன்களைச் சேர்த்தனர். அதன் பிறகு வந்தவர்கள் அடுத்தடுத்து அவுட் ஆக 228 ரன்களை எடுத்தது இலங்கை அணி. பதான், சச்சின் டெண்டுல்கர் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர். ஹர்பஜன், சேவக் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

229 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. வீரேந்தர் சேவக், கங்குலி, லக்ஷ்மண், ராகுல் திராவிட், யுவராஜ் சிங், முகமது கைப் ஆகியோர் சொற்ப ரன்களில் அடுத்தடுத்து அவுட் ஆயினர்.

இதில் சச்சின் டெண்டுல்கர் மட்டுமே தனி நபராக இருந்து இந்திய அணிக்காகப் போராடி ரன்களைச் சேர்த்தார். 100 பந்துகளில் 74ரன்களைக் குவித்தபோது சச்சின் அவுட் ஆனார். யாரும் எதிர்பாராவண்ணம் கடைசியாக வந்த ஜாகிர்கானும் ஹர்பஜனும் இணைந்து ரன்களைச் சேர்த்தனர். ஜாகிர்கான் 2 சிக்ஸர்கள் உட்பட 24 பந்துகளில் 29 ரன்களை எடுத்தார். 50 ஓவர்களில் இந்திய அணி 203 ரன்களை எடுத்தது.

மார்வன் அட்டபட்டு தலைமையிலான இலங்கை அணி 25 ரன்கள் வித்தியாசத்தில் ஆசியக் கோப்பையை வென்றது.

இந்தத் தொடரில் சிறப்பாக விளையாடிய சனத் ஜெயசூர்யா தொடர் நாயகன் விருதை வென்றார். 40 -41 ஆம் பக்கங்களில் ஜெயசூர்யா போஸ்டர் உங்களுக்காக.



• ஜெயசூர்யா



• சச்சின்



• தாளாளர்



• முதல்வர்

விருதுகளைக் குவிக்கும் பள்ளி!

மதுரை
டால்பின் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி
ஸ்பெஷல்

மதுரையின் 'சிறந்த பள்ளி' விருதுகளைத் தொடர்ந்து பெற்று வருகிறது டால்பின் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி.

டால்பின் AR. ராமனாதன் அவர்களின் கடும் உழைப்பால், சவால்களை, பிரச்னைகளை எதிர்கொண்டு பெற்ற வெற்றியால் டால்பின் பள்ளியின் புகழ், பெருமை நாளுக்கு நாள் மெருகேறி வருகிறது.

1987ஆம் ஆண்டில் மார்ச் 29 ஆம் தேதி அன்று 95 மாணவர்கள், 10 ஆசிரியர்களுடன் தொடங்கப்பட்டு, இன்று 2004 ஆம் ஆண்டில் 2300 மாணவ, மாணவியர் வரை படிக்கின்றனர். 110 ஆசிரியர்கள், 40 ஊழியர்கள் உடன் ஆலமரமாய் விரிந்து நற்பெயர் பெற்றுள்ளது. பள்ளியில் சேர சாதிச் சான்றிதழ் கேட்காதது, விண்ணப்பப் படிவத்தில் தாய், தந்தை இருவர் பெயரையும் இடம் பெறச் செய்திருப்பது,



மத நல்லிணக்கம், எளிமையான அணுகுமுறை, சுமாராக படிக்கும் மாணவ, மாணவியரையும் சேர்த்து திறமை மிக்கவர்களாக மாற்றும் பயிற்சி என்று பல சிறப்பு செயல்பாடுகளை டால்பின் பள்ளி கொண்டுள்ளது. கல்வி மட்டுமின்றி ஒழுக்கம், பண்பாடு, கட்டுப்பாடு போன்றவையும் உறுதியுடன் கடைப்பிடிக்கப் படுகின்றன.

சதுரங்க விளையாட்டுப் போட்டியில் டால்பின் பள்ளி மாணவர்கள், சர்வதேச அளவில் வெற்றி பெற்று சாதனை புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஆண்டுதோறும் ஆசிரியர் தினமான செப்டெம்பர் ஐந்தாம் தேதி, டால்பின் பள்ளி, அனைத்து பள்ளி ஆசிரியர்களுக்கும் நடத்தும் 'துரோணாச்சாரியார் சந்திப்பு' என்ற நிகழ்ச்சி மிகவும் பிரசித்தி பெற்றது.

தொகுப்பு - படங்கள்: விஜயாகண்ணன்



''கல்யாண வீட்டுக்கு ஏன்டா பைனாகுலர் கொண்டு வந்திருக்க?''
''எங்க அம்மாதான் 'தூரத்து' சொந்தக்காரங்க எல்லாம் கல்யாணத்துக்கு வர்றாங்கன்னு சொன்னாங்க, அதனாலதான்!''
- சசிகுமார், ஒன்பதாம் வகுப்பு

பல கைகள்


நாட்டில் ஒரு கை இலங்கை
மரத்தில் ஒரு கை முருங்கை
ஆற்றில் ஒரு கை கங்கை
வாழ்க்கையில் ஒரு கை நம்பிக்கை
மாதத்தில் ஒரு கை கார்த்திகை
சந்தோஷத்தில் ஒரு கை புன்னகை
உடன்பிறப்பில் ஒரு கை தங்கை
தெய்வங்களில் ஒரு கை அம்பிகை
மலரில் ஒரு கை மல்லிகை
யானையில் ஒரு கை துதிக்கை

- மு. பால ரகுநாத்,
ஒன்பதாம் வகுப்பு

"காஞ்சிபுரம், தர்மாபுரம், பனாரஸ் இந்த ஊரெல்லாம் நெனச்சா உங்களுக்கு என்ன ஞாபகம் வருது?"

"திருப்பதி, திருச்செந்தூர், பழனி ஞாபகம் வருகிறது!"

- ம. குமரேசன்,
எட்டாம் வகுப்பு



புதிர்

		5
	4	
3		

0,1,2,6,7,8 ஆகிய எண்களைப் பயன்படுத்தி இக் கட்டத்தைப் பூர்த்தி செய்து எந்தப் பக்கம் கூட்டினாலும் 12 வருமாறு உங்களால் செய்ய முடியுமா?

- ர. கிருஷ்ணமூர்த்தி,
பதினோராம் வகுப்பு

விடை

7	0	5
2	4	6
3	8	1

முதன்மையானவர்கள்!

முதல் பெண் பிரதமர் - இந்திராகாந்தி
முதல் பெண் ஆளுநர் - சரோஜினி நாயுடு
முதல் பெண் முதல்வர் - சபிதாகிரி பாலனி
சுப்ரீம் கோர்ட்டின் முதல் பெண் நீதிபதி - மீரா்சாகிப் பாத்திமா பீவி
எவரெஸ்ட் மீது ஏறிய முதல் பெண் - பச்சேந்திரிபால்
முதன்முதலாக ஆங்கிலக் கால்வாயைக் கடந்த பெண் - ஆர்த்திசகா.
முதல் பெண் சபாநாயகர் - ஷானாதேவி
முதல் பெண் தூதர் - விஜயலக்ஷ்மி பண்டிட்
முதல் பெண் ஐ.பி.எஸ். - கிரண்பேடி

- அங்கயற்கண்ணி,
எட்டாம் வகுப்பு

தேடு...

வெற்றியைத் தேடி
வீதிகளில் அலைவது
வீணான தேடல்கள்
தோண்டிப்பார்...
தோல்விக்குள் புதைந்து
கிடக்கிறது வெற்றி.

- ஜீ.செ. ஜெகன்,
எட்டாம் வகுப்பு



அன்பு

*சிப்பிக்குள்ளேயே முத்து இருந்துவிட்டால்
முத்துக்குத்தான் என்ன மதிப்பு?
மேகத்துக்குள்ளேயே... மழை இருந்துவிட்டால்
மழைக்குத்தான் என்ன மதிப்பு?
கனிக்குள்ளேயே விதை இருந்துவிட்டால்
விதைக்குத்தான் என்ன மதிப்பு?
உனக்குள்ளேயே... அன்பு உறங்கிவிட்டால்
அதற்குதான் என்ன மதிப்பு?*

- ரா. கார்த்திக்,
எட்டாம் வகுப்பு



பேராசை!


முத்து ஒரு விவசாயி. தேவலோக யானை ஒன்று பூமிக்கு வந்து முத்துவின் நிலத்தில் உள்ள நெல்லை உண்டு விட்டுத் திரும்பும். முத்து ஒருநாள் மறைந்திருந்து அவ் வெள்ளை யானையின் செயல்களைப் பார்த்தான். பின்பு அது தேவலோகத்துக்குப் பறந்து செல்லும்போது அதன் வாலினை பிடித்துக் கொண்டு அவன் சென்றான். அங்கே உள்ள தேவர்களிடம் நடந்ததைக் கூறினான். பின்பு தேவர்கள் இரக்க மனதுடன் அவனுக்கு முத்துகளைக் கொடுத்தனர். இதைப் பிறரிடம் சொல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டனர். முத்து கீழே வந்து எல்லோரிடமும் செய்தியைப் பரப்பினான்.

மறுமுறை யானை வாலை முத்துப் பிடித்துக் கொள்ள, முத்துவின் காலை இன்னொருவன் பிடிக்க... இப்படி நிறையப் பேர் சேர்ந்து பறந்தனர்.

"ஏண்டா முத்து, எவ்வளவு முத்துகள் கொடுப்பாங்க?" என்றான் ஒருவன். முத்து இரண்டு கைகளையும் விரித்துக் காட்ட, அனைவரும் கீழே விழுந்தனர்.

அதன் பிறகு யானை வரவேயில்லை.

- பி. பாவை,
பதினோராம் வகுப்பு.



விடை என்ன?

1. மெர்க்குரி விளக்கு எந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?
1912

2. மருத்துவ உலகின் தந்தை யார்?
ஹிப்போகிரேட்ஸ்

3. ஒரு நிமிடத்திற்கு உலகில் எத்தனை புயல்கள் உருவாகின்றன?
38 புயல்கள்

4. இந்தியாவில் தரக்கட்டுப்பாட்டுக் கழகம் (ISI) எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
29.4.1947

5. இந்தியா தனது முதல் ராக்கெட்டை எந்த ஆண்டு பறக்கவிட்டது?
1963

6. பெட்ரோலியக் கிணறுகள் இல்லாத அரபுநாடு எது?
ஜோர்டான்

7. உலகின் மிகப் பெரிய வைரம் எது?
குலியன் வைரம். 1905 ஜனவரி 26ல் கண்டுபிடிக்கப்பட்டது.

8. முதன் முதலில் பத்ம ஸ்ரீ விருது பெற்ற நீச்சல் வீரர் யார்?
மிகிர்சென்

- பி. பாலமுருகன், எட்டாம் வகுப்பு



"இந்த 'வைர' வியாபாரியோட நிலைமை இப்படி தலை கீழா மாறிடுச்சு!"

"எப்படி?"

"இப்ப 'ரவை' வியாபாரம் பண்றார்!"

- பி. ஸ்ரீராம் பிரசாத், பதினோராம் வகுப்பு

"மனிதனுக்கு எத்தனை கண்கள்?"

"முகக் கண்கள் இரண்டு, நகக்கண் இருபது!"

- மு. அருண்குமார்,க. வினோத், ஒன்பதாம் வகுப்பு

மதுரை பாலபின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஸ்பெஷல்

மதுரை டால்பின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஸ்பெஷல்



ஆர். கௌசல்யா,
மூன்றாம் வகுப்பு



டி. ஷாருமதி
முதல் வகுப்பு




ஆர். சிவராமகிருஷ்ணன்,
மூன்றாம் வகுப்பு




எஸ். சுஸ்மிதா,
மூன்றாம் வகுப்பு




எஸ். ஆந்தோணி மெல்வின்
முதல் வகுப்பு




தனேஷ் வி. மேனன்,
இரண்டாம் வகுப்பு




எம். ஆனந்த்
மூன்றாம் வகுப்பு



எம். ஏஞ்சலின்
தீபா ஜாய்
முதல் வகுப்பு




ஏ.எஸ். அசார் ஜாகீர்
மூன்றாம் வகுப்பு



ஆர். ரோஷினி,
யு.கே.ஜி



குறுக்கெழுத்துப் புதிர்



கட்டங்களை நிரப்புங்கள்

இடமிருந்து வலம்

1. மனிதனுக்கு இந்தக் கை அவசியம் (5)
6. ஒரு வகைத் தானியம் (3)
8. குறும்பு (4)
9. நூறு ஆயிரம் (4)
10. தண்ணீர் பிடித்து வைக்கும் பாத்திரங்களில் ஒன்று (3)
12. பேய்ப் படத்தைப் பார்க்கும் போது ______ உண்டாகும் (3)


வலமிருந்து இடம்

3. உயிர்களிடத்தில் இது வேண்டும் (3)
5. வேள்வி என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)
13. பால் உறைந்தால் ______ (3)
15. அர்ச்சனையின்போது சொல்வது ______ (5)

மேலிருந்து கீழ்

1. சிவன் சன்னதிக்கு முன் இருப்பது (3)
2. சிவ லோகம் (4)
3. நியாயம் - இதன் எதிர்ப்பதம்? (5)
6. இது சிறுத்தாலும் காரம் குறையாது (3)
7. வயல் (3)
8. ஆசிரியர் (5)
11. கொல்கத்தாவில் உள்ள விமான நிலையம் (4)

விடை 30 ஆம் பக்கம்



கீழிருந்து மேல்

4. ______ உடையான், படைக்கு அஞ்சான் (3)
14. நாடாளுமன்றம் அமைந்துள்ள இடம் (3)
15. பூ (3)


- வி.பி. மதிபாலன், பதினோராம் வகுப்பு, புனித அன்னம்மாள் மேல்நிலைப் பள்ளி, கூடன்குளம், திருநெல்வேலி மாவட்டம்



சோணாசலம்

ஊரில் திருட்டு பயம் அதிகமாக இருந்தது. சோணாசலம் ரொம்ப ஜாக்கிரதையானவர். தினமும் புறக்கடைக் கதவைத் தாளிடும் முன் தோட்டத்தை நன்றாக ஆராய்வார். வேலை அதிகம் ஆனதால் ஒருமாதமாய் தோட்டத்திற்குத் தண்ணீரே பாய்ச்சவில்லை. நாளைக்குப் பாய்ச்ச வேண்டும் என்று எண்ணியவர் திடுக்கிட்டார். முருங்கை மரத்திற்குப் பின்னால் மூச்சு விடும் சத்தம் கேட்டது. பாம்பாயிருக்குமோ என்று லாந்தர் விளக்கைத் தூக்கிப் பிடித்தார். கறுப்புப் போர்வைக்குள் ஓர் ஆள். சட்டென்று லாந்தரை இறக்கினார்.

திருடன் கட்டாயம் ஆயுதம் வைத்திருப்பான். அவசரப்பட்டு ஆபத்தை



வீட்டில் திருடர்கள்!

✪ மாலதி ✪

வரவழைத்துக் கொள்ளக் கூடாது. துல்லியமாக ஆராய்ந்த போது மேலும் இருவர் பலாமரத்தின் கீழும், அவரைப் பந்தலின் மறைவிலும் தென்பட்டனர்.

கதவருகே நின்று, ''அடியே, குந்தளா! இங்கே வா, களவாணி போன வாரம் உங்க அம்மாங்கா வீட்டுக்கு வந்திருக்கான். முந்தா நாள் உங்க அத்தங்கா வீட்டுலே சுருட்டியிருக்கான். நம்ம வீட்டுக்கு என்னிக்கு விஜயம் பண்றாங்களோ! அதனாலே நீ பெரிய மரப் பெட்டியிலே நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், பவுன் காசுகள் எல்லாத்தையும் போட்டு பூட்டி வை. நாம ரெண்டு பேருமா அதைக் கிணத்துக்குள்ளே இறக்கிடலாம். திருட்டு பயம் போனதும் எடுத்துக்கலாம். என்ன சொல்றே?'' என்றார்.

''ரொம்ப அழகாயிருக்கு! ரகசியமா செய்யவேண்டிய காரியத்துக்கு இப்படியா கத்துவார்கள்! ராத்திரி நேரம். திருடனுங்க ஒளிஞ்சிட்டிருக்கலாமில்லையா?'' என்று தோள் பட்டையில் முகத்தை இடித்துக் கொண்டாள்.

''அதெல்லாம் எனக்குத் தெரியும். நாம செய்கிற காரியம் யாருக்கும் தெரியாது. முதல்லே எல்லா ஜன்னலையும் சாத்து'' என்றபடி அவளையும் தள்ளிக் கொண்டு உள்ளே போனார்.

அவள் முணுமுணுத்தபடி ஜன்னல் கதவுகளையெல்லாம் சார்த்தி கொக்கி யிட்டாள். திருடர்களுக்குப் படுகுஷி. "நமக்கு வேலை ரொம்ப சுலபமாகி விட்டது! கதவை உடைத்துக் கொண்டு உள்ளே போய், கத்தியைக் காட்டி மிரட்டி, பணம், நகை களைத் தேடி... எதுவுமே அவசியமில்லா மப் போச்சு. லாந்தரைத் தூக்கிப் பார்த்ததும் 'பக்'குனு ஆயிடுச்சு. அதையே கண்டுபிடிக்க முடி யலை! இவனெல்லாம்..'' என்றான் ஒருவன்.

முருங்கை மரத்தின் பின்னாலிருந்தவன், ''கிணத்துலே ஆழத் துலே தண்ணி



கிடக்கு. நீ கிணத்துலே இறங்கி தண்ணியைச் சேந்து. நாங்க இரண்டுபேரும் மாறி மாறி கயிறு விடறோம். ஒரு மணி நேரத்துலே வற்றடிச் சுடலாம். பெட்டியிலே கெட்டியா கயிற்றைக் கட்டி விடு. இரண்டு பேருமா இழுக்கறோம்'' என்றான்.

மூவரும் இப்படி சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தபோது உள்ளே சோணாசலம் பெரிய மரப் பெட்டியைக் காலி பண்ணி அதற்குள் ஓட்டை, உடைசல் அலுமினியப் பாத்திரங்கள், துருப்பிடித்த இரும்பு சாமான்கள் எல்லாவற்றையும் போட்டு நிரப்பி பெட்டியைப் பூட்டினார்.



யானையின் துதிக்கையில் எலும்புகள் கிடையாது. மாறாக அதன் துதிக்கையில் 60,000 தசை நார்கள் உண்டு.
யானையால் தன் துதிக் கையில் ஏழு லிட்டர் தண்ணீரை உறிஞ்சி வைத்துக் கொள்ள முடியும்.

குந்தளா பேச வாயைத் திறந்தபோது, ''உஷ்'' என்று வாயில் விரலை வைத்து எச்சரித்தார். கணவனும், மனைவியுமாகப் பெட்டியைத் தூக்கமாட்டாமல் தூக்கி வந்து கிணற்றுக்குள் 'தொப்'பென்று போட்டதை மூன்று திருடர்களும் பார்த்து, ''அட, அசடே'' என ஏளனமாக நினைத்தனர்.

சோணாசலம் உள்ளே போனதும் கறுப்பு ஆடை அணிந்து முகத்திலே கரியைப் பூசிக் கொண்டு மண்வெட்டி சகிதம் வாசல் கதவை மெதுவாகத் திறந்து, சுற்றிக் கொண்டு கொல்லைப் புறம் சென்றார். கள்வர்கள் நீர் இறைக்க ஆயத்தமானார்கள். கள்வர்கள் வியர்க்க விறு விறுக்க இறைத்த நீர் தேங்காதபடி மரங்களுக்குப் பாய்ச்சிக் கொண்டிருந்தார் சோணாசலம்.

''தண்ணி ஊறிக்கிட்டே இருக்குடா'' என்று உள்ளேயிருந்தவன் குரல் கொடுத்தான்.

''போதும். விடியப் போகுது. பெட்டி தெரியுதா?'' எரிச்சலோடு கேட்டான் வெளியிலிருந்த ஒருவன்.

'தெரியுது' - உள்ளேயிருந்து பதில் வந்தது.

''இந்தா! கயிறு, பெட்டியை நாலா பக்கமும் இறுக்கமாக் கட்டு'' என்று கயிற்றை வீசினான் மற்றொருவன்.

''ஆச்சா! சீக்கிரம்'' என்று துரிதப் படுத்த ''ஜாக்கிரதையா இழுங்கடா! விட்டுட்டீங்கன்னா இங்கேயே சமாதிதான்'' என்று கிணற்றுக்குள்ளிருந்தவன் எச்சரித்தான்.

''நிதானமா இழுங்கடா! எதுக்கு அவசரப் படணுமின்னு வரைமுறை இல்லையா? 'டங்'குனு இடிச்சதுலே கண்ணெல்லாம் காரை'' என்றான் உள்ளே யிருந்தவன் எரிச்சலோடு.


''நீ ஏன் மேலே பார்க்கறே? குனிஞ்சுக்க... சே, பாத்திரங்க வேறே லொட லொடங்குது'' என்று அலுத்துக்கொண்டான் மேலே நின்றவன்.

''தண்ணி இறைச்சு இறைச்சு கையெல்லாம் புண்ணாயிருக்குடா'' என்றான் மற்றவன்.

''ரொம்பப் பேசாதீங்கடா! உள்ளே உள்ளவன் முழிச்சுக்கப் போறான்'' என உஷார் படுத்தினான் கிணற்றுள் இருந்தவன்.

ஒரு வழியாக பெட்டி மேலே வந்தது. அதை இறக்கிக் கயிற்றை வீச, கிணற்றுக்குள் இறங்கியவனும் வெளியே வந்தான். ''இங்கேயே பூட்டை உடைச்சுப் பார்க்கலாமாடா?'' என்று அவன் ஆவலாகக் கேட்டான்.

''பூட்டு ரொம்ப விலை உசந்தது! நான் சாவி போட்டுத் திறந்துக்கறேன். ரொம்ப நன்றி. ஒரு மாசத்துக்குத் தோட்டம் காயாது. இனிமே அடுத்த மாசம் வந்தால் போதும்'' என்று சோணாசலம் கூற, மூவரும் திடுக்கிட்டுக் குதிகால் பிடரியில் பட ஓட்டமெடுத்தனர்.



சந்தா செலுத்துங்கள்; கதை கேளுங்கள்!

எப்படி பெறலாம்?

* புதிதாக சந்தா செலுத்தலாம் ☐
* ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐
* உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

நண்பரின் பெயர்: ....

முகவரி: ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.


அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர்,
கோகுலம் (தமிழ்)
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097

கண்ணீர் வடிக்கும்



மிக்ஸர் பிட்ஸ்




* அரிய தாவர இனங்கள், அரிய வனவிலங்குகள் இவை பற்றிய செய்திகளைத் தொகுத்து வைத்திருக்கும் புத்தகத்தின் பெயர் 'ரெட் டேட்டா புக்.'

* இங்கிலாந்து நாட்டின் அரசு புத்தகத்திற்கு 'நீலப்புத்தகம்' என்று பெயர்.

* எந்தவிதமான ஒளிவு மறைவும் இல்லாமல், நடந்ததை நடந்தபடியே எழுதப்பட்ட நாட்குறிப்பிற்கு ஆங்கிலத்தில் ப்ளு டயரி என்று பெயர். லெனினின் நாட்குறிப்பு ப்ளு டயரி என்றே அழைக்கப்படுகிறது.

- எஸ். துர்கா காத்யாயணி, தூத்துக்குடி



கேரளாவில் திருச்சூர் மாவட்டத்தில் உள்ள ஏரவிமங்களம் என்ற கிராமத்தின் மொத்த ஜனத் தொகை ஐயாயிரம். இந்த ஐயாயிரம் பேரும் தங்கள் ரத்த வகை என்ன என்பதை அறிந்து வைத்திருக்கிறார்கள்! ரத்த தானம் செய்ய அம்மக்கள் எப்போதும் தயார். இந்தியாவிலேயே நூறு சதவீதம் ரத்த தானம் பற்றிய அறிவு பெற்ற கிராமம் அந்தக் கிராமம் மட்டுமே!




ஆரம்ப காலப் புத்தகங்கள் பலவற்றின் அட்டைகள் மரத்தாலும், தோலாலும், உலோகத்தாலும் கூட உருவாக்கப்பட்டிருந்தன. அவை விலை உயர்ந்த பொக்கிஷப் பெட்டிகளைப் போல பாதுகாக்கப்பட்டு வந்தன! அப் புத்தகங்களை யாரும் திருடிச் சென்றுவிடாதபடி அவற்றைச் சங்கிலியால் பிணைத்துக் கட்டி வைக்கும் வழக்கம் கூட இருந்திருக்கிறது! அக்கால மக்கள் நல்ல புத்தகங்களை அவ்வளவு நேசித்திருக்கிறார்கள்!

- பி. சுசீலா, உடுமலை

பட்டம் பறக்க விடுவது ஜப்பான், கொரியா, மலேசியா போன்ற நாடுகளில் தேசிய அளவில் சிறப்பு பெற்ற விளையாட்டாகக் கருதப்படுகிறது. இதில் எல்லா நாடுகளையும் மிஞ்சி நிற்பது சீனாதான். சீனாவில் வருடத்தின் ஒன்பதாவது மாதத்தின் ஒன்பதாவது நாள் இன்று கூட 'பட்டம் நாள்' என்றே கொண்டாடப்படுகிறது.

- பி. ராஜசேகரன், மதுரை




மற்ற எந்த நாட்டு கரன்ஸிகளுக்கும் இல்லாத ஓர் அம்சம் இப்போது ஸ்வீடன், இஸ்ரேல், ஹாலந்து ஆகிய நாடுகளின் கரன்ஸிகளில் உண்டு. பார்வை இழந்தவர்களும் ரூபாய் நோட்டைத் தடவிப் பார்த்து அதன் மதிப்பை உணர்ந்து கொள்ளும் படியாக இந்நாட்டு கரன்ஸிகள் பிரெயில் முறையிலும் அச்சிடப்பட்டுள்ளன.

- நெ. இராமன், சென்னை

குன்று!



இத்தாலியிலுள்ள 'பாக்கலாஸா' என்ற குன்று அழும் தன்மை பெற்றது. இந்தக் குன்று அழ ஆரம்பித்து விட்டால் அடுத்த சில நிமிடங்களில் மழை பெய்யப் போகிறது என்று அர்த்தம். நீர் உறிஞ்சும் பாறைகளால் ஆனது அந்தக் குன்று. காற்றில் ஈரப்பதம் அதிகரிக்கும்போது, அது ஈரத்தை உறிஞ்சி வெளியிட ஆரம்பிக்கிறது. அதனையே 'குன்று கண்ணீர் விடத் தொடங்கி விட்டது' என்று மக்கள்



குறிப்பிடுகின்றனர்.

- இரா. பிரசன்னா, கரூர்

அடுக்கு மல்லி அதிகாலை ஐந்து மணிக்குப் பூக்கும்.

செம்முல்லை காலை ஆறுமணிக்குப் பூக்கும்.


மன்மதபாணம் என்ற மலர் காலை ஏழு மணிக்குப் பூக்கும்.

அந்தி மந்தாரை மாலை நான்கு மணிக்குப் பூக்கும்.

பிச்சிப்பூ மாலை ஆறுமணிக்குப் பூக்கும்.

நித்திய மல்லிகைப் பூவும், காட்டு மல்லிகைப் பூவும் இரவு ஏழு மணிக்குப் பூக்கும்.

பவழமல்லிகை இரவு எட்டு



மணிக்குப் பூக்கும்.

இருவாட்சிப்பூவும், நிஷாகந்தி பூவும் இரவு பன்னிரண்டு மணிக்குப் பூக்கும்.

- மு. பெரியசாமி,
விட்டுக்கட்டி

டிஸ்னி படைத்த 'மிக்கி' என்ற சுண்டெலிக்கு குரல் கொடுத்தவரே வால்ட் டிஸ்னி தான். சுமார் 20 ஆண்டுகள் அந்த அரும் பணியை அவர் செய்து வந்தார். பல மில்லியன் டாலருக்குச் சொந்தக்காரர் ஆகிவிட்ட நிலையிலும் அவர் குரல் கொடுக்கும் பணியைத் தொடர்ந்து செய்தார் என்பது வியப்புக்குரிய விஷயம்தான்!

- சந்தோஷ், சென்னை





ஆடும் வீட்டினுள் அச்சமின்றி பிள்ளைகள்!

விடுகதைப் பக்கம்



I 1. நாவிருந்தும் தானாய் அசைக்க மாட்டான், நாம் அசைந்தால் ஓய மாட்டான் _ அவன் யார்?

2. வெள்ளிக் குகைக்குள் தங்கப் புதையல் - அது என்ன?

3. ஒரு தோசை சுட ஒரு மாதம் - அது என்ன?

4. சாட்டை எடுத்தால் சதிராடும் மங்கை - அவள் யார்?

- எஸ். கவிதா
திருநெல்வேலி

II 1. பூத்தபோது மஞ்சள்; காய்ந்தபோது சிவப்பு; கனிந்தபோது கறுப்பு; உண்ணும் போது இனிப்பு - அது என்ன?

2. ஒத்தையடிப் பாதையிலே ஓடி விளையாடும் எட்டு சடைக்காரியை, எட்டிப் பார்த்த எதிரியெல்லாம் செத்துப் போகும் - அது என்ன?

3. தெரிந்து காய் காய்க்கும், தெரியாமல் பூ பூக்கும் - அது என்ன?

4. ஆடும் வீட்டினுள் அச்சமின்றி பிள்ளைகள் - அது என்ன?

- கே. அமுதா, திருவாரூர்

III 1. ஒரு கால் மனிதனுக்கு வயிறு நிறைய முட்டை - அவன் யார்?

2. விடிய விடிய பூந்தோட்டம், விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம் - அது என்ன?

3. நாளுக்கு நாள் இளைப்பவன்! நாள் காட்டும் வேலை செய்கிறான் - அவன் யார்?

4. வெள்ளை முத்துக் கோட்டைக்குள் செம்பவள ராணி - அவள் யார்?

- உமா ராணி, அறந்தாங்கி

IV 1. வட்டமேஜை ஒன்று விட்டத்தில் தொங்குது, கிட்டத்தில் போனால் கொட்டத்தான் பார்க்குது - அது என்ன?

2. சிவனோ வெள்ளை, சக்தியோ மஞ்சள் சிவனுக்குள்ளே சக்தி - அது என்ன?

3. மொட்டை நெற்றியில் பட்டமரம் கிட்டே சென்றால் எட்டவே ஓடுது - அது என்ன?

- ஆர்.ஜி. காயத்ரி,
நெல்லை

V 1. இணைபிரிய மாட்டார்கள்; நண்பர்களல்ல, ஒன்று சேர மாட்டார்கள்; பகைவர்களல்ல - அது என்ன?

2. ஈட்டி படை வென்று; காட்டுப் புதர் கடந்து கனகமணி புதையலைக் கண்டுபிடிக்கலாம் - அது என்ன?

3. உழவன் விதைக்காத விதை; கொத்தன் கட்டாத கட்டடம்; வண்ணான் வெளுக்காத வெள்ளை; சிற்பி செதுக்காத கல் - அது என்ன?

4. ஊரைச் செழிக்க வைத்து, உல்லாச நடை பயின்று, வளைந்து குலுங்கி, வையமெல்லாம் சுற்றி, வருகிறாள் ஒரு வனிதை - அது என்ன?

- எம். அலர் மேல் மங்கை தாயார்,
பத்தாம் வகுப்பு, திருவையாறு

விடைகள்:

I 1. மணி 2. முட்டை 3. பௌர்ணமி 4. பம்பரம்
II 1. பேரிச்சம்பழம் 2. சிலந்தி 3. அத்திமரம் 4. தூக்கணாங்குருவிக் கூடு
III 1. மிளகாய் 2. நட்சத்திரம் 3. காலண்டர் 4. நாக்கு
IV 1. தேன்கூடு 2. முட்டை 3. மான்
V 1. ரயில் தண்டவாளம் 2. பலாப்பழம் 3. பல் 4. நதி



1000/- ரூபாய் பரிசு!

இந்த மாதப் போட்டி

உங்களை இந்தப் போட்டி மிகவும் கவர்ந்திழுப்பது, நீங்கள் பங்கு பெறுவதிலிருந்தே தெரிகிறது. இந்த மாதப் போட்டிக்குத் தயாரா?

அதற்கு முன் நீங்கள் செய்ய வேண்டியது, சரியான பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுத வேண்டும். பெற்றோர் கையொப்பம் இருக்க வேண்டும். முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ. 200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி: 20.09.2004



கென்யா

1. தலைநகரம் ____________




2. மொழிகள் ____________, ____________
3. முக்கிய இடங்கள் ____________, ____________
4. கரன்ஸி ____________
5. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் முக்கிய இடம் ____________
6. இது எந்த நாட்டுக் கொடி?



ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097





ஹலோ
சுகமா?

இரண்டு கண்களும் இரண்டு காட்சிகளைக் காண முடியுமா?

● எம். வினோத், சங்கரன்கோவில்

? நார்ச்சத்து என்றால் என்ன? அது எந்த உணவில் உள்ளது?

! நார்ச்சத்து என்பது கார்போஹைட்ரேட் வகையைச் சேர்ந்த ஓர் உணவுச்சத்து. இது குடலில் உட்கிரகிக்கப்படாமல் அப்படியே மலத்துடன் வெளியில் வந்துவிடும். இச்சத்தினால் நமக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. முக்கியமாக, கொழுப்புச்சத்து குடலில் உறிஞ்சப்படுவதைத் தடுக்கிறது. இதனால் உடல் பருமன் ஆகாது. மலச்சிக்கல் ஏற்படாது. பிற உணவுகள் எளிதில் செரிமானமாகும். இது தவிர, இச்சத்து சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்துகிறது. குடலில் புற்றுநோய் உண்டாவதைத் தடுக்கிறது. ரத்த அழுத்தநோய் உள்ளவர்களுக்கும் இதய நோயாளிகளுக்கும் இது நல்லது. நமக்கு தினமும் 20லிருந்து 40 கிராம் வரை நார்ச்சத்து தேவை. அரிசி, கோதுமை, கேழ்வரகு போன்ற முழுத்தானியங்கள், உளுந்து, பட்டாணி, கொண்டைக்கடலை, மொச்சை போன்ற பருப்புகள், ஆரஞ்சு, கொய்யா, மாதுளை, ஆப்பிள் போன்ற பழங்கள், அவரை, முள்ளங்கி, புதினா, கொத்துமல்லி, பீர்க்கங்காய், புடலை போன்ற பச்சைக் காய்கறிகள் மற்றும் கீரைகளில் நார்ச்சத்து அதிகமுள்ளது.

● தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்.

? நம் உடலில் ரத்த ஓட்டம் தடைபட்டுள்ளது என்பதை எப்படி தெரிந்து கொள்வது, டாக்டர்?

! மனித ரத்தமானது இதயத்திலிருந்து கிளம்பி தமனி நாளங்கள் வழியாக உடல் முழுவதும் சென்றுவிட்டு, சிரைநாளங்கள் வழியாக மீண்டும் இதயத்திற்குத் திரும்பி வருவதை நீங்கள் தெரிந்து வைத்திருப்பீர்கள். இந்த ரத்த ஓட்டப்பாதையில் கொழுப்பு அடைத்தால், ரத்தநாளம் சுருங்கிவிட்டால் ரத்த ஓட்டம் தடைபடும். இந்த அடைப்பு எந்த இடத்தில் ஏற்படுகிறதோ அதற்கேற்ப உடலில் சில அறிகுறிகள் தெரியும். அவற்றை வைத்து ரத்த ஓட்டம் எங்கு தடைபட்டுள்ளது என்பதை தெரிந்து கொள்ள முடியும். மேலும் இதை உறுதி செய்வதற்குச் சில பரிசோதனைகளும் உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, இதயத்தசைகளில் ரத்த ஓட்டம் தடைபட்டுள்ளதை 'ஆஞ்சியோகிராம்' மூலம் தெரிந்து கொள்ளலாம். காலில் ரத்த ஓட்டம் தடைபட்டுள்ளதை 'டாப்ளர் ஸ்கேன்' மூலம் அறிய முடியும்.

● ஜி.கே.எஸ். மூர்த்தி,
கோபிச்செட்டிப்பாளையம்


? நமது இரண்டு கண்களும் இரு காட்சிகளைத் தனித் தனியாக ஏன் காணமுடிவதில்லை?

! முதல் காரணம், நம் இரு கண்களும் தனித் தனிக் காட்சிகளைக் காண்பதில்லை. ஒரே காட்சியைத்தான் காண்கின்றன. இரண்டாவது காரணம், கண்கள் காணும் காட்சிகள் அப்படியே மூளைக்குச் செல்வதில்லை. வலது கண் விழித்திரையில் விழும் பிம்பத்தின் இடது பாதியும் இடதுகண்



✪ டாக்டர் கு.கணேசன் ✪

விழித் திரையில் விழும் இடது பாதியும் மூளையின் இடதுபக்கத்திற்குச் செல்கிறது. வலதுகண் விழித்திரையில் விழும் பிம்பத்தின் வலது பாதியும் இடது



கண் விழித்திரையில் விழும் வலது பாதியும் மூளையின் வலது பக்கத்திற்குச் செல்கிறது. இந்த இரண்டு பாதிகளையும் இணைத்து ஒரு காட்சியாக இனம் காண்கிறது மூளை. ஆகவே, நம்மால் ஒரே நேரத்தில் ஒரே காட்சியைத்தான் காண முடியும்.

● இல. கலைவாணி, கடலூர் - குள்ளஞ்சாவடி

? என் வயது 18. எனக்கு அடிக்கடி வயிற்றுவலி வருகிறது. உணவில் காரம் இருந்தால் வயிற்றுவலி அதிகமாகிறது. இதற்கு என்ன சிகிச்சை, டாக்டர்?

! வயிற்றில் புண் இருந்தால் இவ்வாறு ஏற்பட வாய்ப்புள்ளது. மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகள் சாப்பிட வேண்டும். அத்தோடு உன் உணவுப் பழக்கத்தில் சில மாறுதல்களைச் செய்து கொண்டால் வயிற்றுவலி குறையும். அதிக சூடாக எதையும் சாப்பிட வேண்டாம். அவசரம் அவசரமாகச் சாப்பிடுவதும் தவறு. காரம் அதிகமாக உள்ள உணவுகள் வேண்டாம். மசாலா கலந்த, எண்ணெய் மிகுந்த, கொழுப்பு நிறைந்த, புளிப் பேறிய உணவுகளைக் குறைத்துக் கொள். ஒரே நேரத்தில் வயிறு நிறையச் சாப்பிடுவதைவிட மூன்று அல்லது நான்கு மணி நேர இடைவெளிகளில் சிறிது சிறிதாகச் சாப்பிடலாம்.

புதிர் இங்கே! விடை கீழே!

1. மனிதனின் மண்டையோட்டில் எத்தனை எலும்புகள் உள்ளன?
   அ. 8
   ஆ. 10
   இ. 14

2. சூரிய ஒளியிலிருந்து கிடைக்கும் வைட்டமின் எது?
   அ. வைட்டமின் - ஏ
   ஆ. வைட்டமின் - பி
   இ. வைட்டமின் - டி

3. டாக்டர்கள் தினம் என்று கொண்டாடப்படுகிறது?
   அ. மே - 1.
   ஆ. ஜூன் - 1
   இ. ஜூலை - 1

4. ஒரு துளி ரத்தத்தில் சிவப்பு ரத்த அணுக்கள் எவ்வளவு உள்ளன?
   அ. 100 மில்லியன்
   ஆ. 200 மில்லியன்
   இ. 300 மில்லியன்

5. இவற்றில் எது தொற்றுநோய்?
   அ. ரத்தசோகை
   ஆ. மாலைக்கண் நோய்
   இ. காலரா

விடை இங்கே!
1. அ 2. இ 3. இ 4. அ 5. இ



புதையல்

அந்த அமாவாசைக்கு முதல் நாள் மாலை பாலு மீண்டும் டில்லிபாபுவைப் போய்ச் சந்தித்தான். இரண்டு பேரும் கடற்கரை மணலில் அமர்ந்து வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். மனதுக்குள் கொஞ்சம் பயமும் சாகச உணர்வும் சரிவிகிதத்தில் கலந்திருந்தது இருவருக்குமே.

"எசகுபிசகா மாட்டிக்கிட்டா என்ன செய்யறது?" என்றான் டில்லிபாபு.

"பயப்படாத டில்லி! கண்டிப்பா மாட்டிக்க மாட்டோம். நம்ம ப்ளான் என்ன? ரகசியமா நாளைக்கு ராத்திரி பன்றித்தீவுக்குப் போறோம். யார் கண்ணுலயும் படாம ஒளிஞ்சு இருந்து அவங்க என்ன பண்றாங்கன்னு பார்க்கப் போறோம். அவங்களோட சதி என்ன, அந்தப் புதையல் என்னது, அதை எப்படி தேடி எடுக்கறாங்கன்ற விஷயங்களை கவனமா பார்த்து வெச்சிக்கறோம். முடிஞ்சா கையும் களவுமா அவங்களை மடக்கப் பார்க்கறது. அது எப்படி முடியும்னு தெரியலை. ஒருவேளை முடியலைன்னா, மறுநாள் காலை கடற்படை அதிகாரிகள்கிட்ட விஷயத்தைச் சொல்லிடறது... நாம பார்த்ததுக்கு சாட்சியா போட்டோ வேற எடுக்கப் போறோமே!"

"போட்டோவா? ஃப்ளாஷ் அடிச்சா தெரிஞ்சுடுமே" என்று கவலைப்பட்டான் டில்லிபாபு.

"ஆமா. கொஞ்சம் ரிஸ்குதான். ஆனாலும் செஞ்சுதான் ஆகணும். இதுபத்தித்தான் இன்னிக்குக் காலைல குடுமிநாதன்கிட்ட பேசிக்கிட்டிருந்தேன்" என்ற பாலு, சட்டென்று பல்லைக் கடித்துக் கொண்டான்.

"ஓ, அவந்தான் அந்த மூணாவது ஆளா!" என்று அட்டகாசமாகச் சிரித்தான் டில்லிபாபு.

இருட்டத் தொடங்கிய நேரம் பாலு, குடுமிநாதன் வீட்டுக்குப் போய் விஷயத்தைச் சொல்லி அவனையும் கடற்கரைக்கு அழைத்து வந்தான்.

"கேட்டுக்கங்கடா. இதான் ப்ளான், நாளைக்கு நைட் நீங்க ரெண்டு பேரும் வீட்டுல ஏதாவது சொல்லிட்டுக் கிளம்பி வர்றீங்க. கரெக்டா இந்த மாதா கோயில் பின்புற சுவர்கிட்ட வந்து நிக்கணும். ஒன்பது மணிக்கு நான் வந்துடுவேன். ஒன்பதரைக்கு இங்க வெளிச்சம் சுத்தமா போயிடும். யார் கண்ணுலயும் படாம நாம கட்டுமரம் ஏறிடணும். கட்டுமரத்தைக் கடலுக்குள்ள தள்ள எனக்கு குடுமி உதவி பண்ணணும். பாலு, உன்னால முடியாதுன்னு எனக்குத் தெரியும்! நீ உன் உடம்பைப் பத்திரமா எடுத்துக்கிட்டு வந்து கட்டுமரத்துல ஏத்தினாலே பெரிய விஷயம்!" என்று சொல்லிவிட்டு டில்லி சிரித்தான்.

"அது ஒண்ணுதாண்டா எனக்குப் பயமா இருக்கு. எனக்கு வேற நீச்சல் தெரியாது!" என்று வருந்தினான் பாலு.

"பத்திரமா போய்ச் சேருவோம். கவலையே படாத. கட்டுமரம் ஏறினா, சரியா அரை மணி நேரத்துல பன்றித் தீவுக்குப் போயிடலாம். காத்து நமக்கு சாதகமா இருக்கணும். அது ஒண்ணுதான் என் கவலை. உன்னை பத்திரமா கொண்டு போக வேண்டியது என் பொறுப்பு. போதுமா?" என்றான் டில்லிபாபு.

மூவரும் திருப்தியுடன் கலைந்து, அவரவர் வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

மறுநாள் காலையிலிருந்தே பாலு கவன




தீவு

✪ பா.ராகவன் ✪

மாகத் தன் அம்மாவிடம், அன்றிரவு குடுமி நாதன் வீட்டுக்குப் படிக்கப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டிருந்தான். "க்ரூப் ஸ்டடி பண்ணப் போறோம்மா. அரையாண்டுப் பரீட்சை வருதில்ல? அதுக்காக" என்கிற அவனது பொய் அவனுக்கே கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் ஒரு நல்ல காரியத்துக்காகச் சொல்லப்படும் பொய் தவறாகாது என்று தன்னையே தேற்றிக் கொண்டான்.

"இத்தனை நாள் இல்லாம இதென்னடா புதுப் பழக்கம்? வேணும்னா அவனை நம்ம வீட்டுக்கு வந்து படிக்கச் சொல்லேன்" என்றாள் பாலுவின் அம்மா.

"ஐயோ அம்மா! கொஞ்சம் புரிஞ்சுக் கோயேன். இன்னிக்கு நானும் மத்த சில ஃப்ரெண்ட்ஸும் அவன் வீட்டுக்குப் போறோம். இன்னொரு நாள் எல்லாரும்



நம்ம வீட்டுக்கு வருவாங்க. சேர்ந்து படிச்சி எல்லாரும் நைண்டி மார்க்ஸுக்கு மேல வாங்கறதா ப்ளான் பண்ணியிருக்கோம்'' என்றான் பாலு.

''சரி, நல்லா படிங்க. அது போதும்'' என்றவள், ''போகும்போது ஞாபகப்படுத்து. ராத்திரி பசிச்சா சாப்பிட கொஞ்சம் தின் பண்டங்கள் தரேன்'' என்றும் சொன்னாள்.

மாலையிலிருந்தே அவனுக்குப் பரபரப்பு தொற்றிக் கொண்டுவிட்டது. குடுமிநாதனும் அவன் வீட்டில் 'க்ரூப் ஸ்டடி'க்காக பாலுவின் வீட்டுக்குப் போவ தாகவே சொல்லியிருந்தான். கவனமாக திட்டமிட்டே இருவரும் செயல்பட்டார்கள். டில்லிபாபுவுக்கு எந்தப் பிரச்னையும் இருக்காது. கட்டுமரம் எடுத்துக் கொண்டு கடலுக்குள் போவது அவனைப் பொறுத்தவரை மிகவும் சாதாரணமான தொரு விஷயம். அதுவும் பொதுவாகவே மாலை வேளையில்தான் அவனும் அவனது அப்பாவும் மீன் பிடிக்கக் கிளம்புவார்கள்.

''ஒரு டார்ச் லைட், சின்ன கேமரா, பேனா கத்தி, ஒரு பெரிய கயிறு... அப்புறம்...''

''மறந்துட்டியா? கொசு மருந்து அடிக்கற குழாய் சொல்லியிருந்தேனே'' என்று நினைவூட்டினான் டில்லி.

''கண்டிப்பா எடுத்துட்டு வரேன். எங்க வீட்டுல ஒரு காலி ஸ்ப்ரே பாட்டில் இருக்கு. உள்ளே தண்ணி ஊத்தி அடிச்சி விளையாடியிருக்கேன்'' என்றான் பாலு.

''என்னதுடா?'' என்றான் குடுமிநாதன்.

''உஷ்! அதெல்லாம் போகும்போது சொல்லுறேன்'' என்று அவன் சொல்லி யிருந்தான்.

இரவு ஏழு மணிக்கே அப்பாவின் குட்டி கேமராவை எடுத்து, அதில் பிலிம் இருக்கிறதா என்று பார்த்துவிட்டுத் தன் பள்ளிக்கூட நோட்டுப் புத்தகப் பையில் போட்டுக் கொண்டான் பாலு. தான் எடுத்துச் செல்ல வேண்டிய பிற பொருட்களையும் ரகசியமாக எடுத்து அதே பையில் திணித்துக் கொண்டு மேலே இரண்டு புத்தகங்களை வைத்து மறைத்துக் கொண்டான். கயிறு மட்டும் குடுமிநாதன் எடுத்து வருவதாகச் சொல்லியிருந்தான். இதெல்லாம் எதற்கு என்று திட்டம் இல்லாவிட்டாலும் ஏதாவது வகையில் உபயோகப்படும் என்று டில்லிபாபுதான்

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 ந	ம்	பி	க்	2 கை	■	பு	ன்	3 அ
ந்	■	ம்	■	லா	■	■	■	நி
தி	■	4 த	■	ய	■	ம்	க	5 யா
■	■	■	6 க	ம்	7 பு	■	■	ய
8 வா	லா	ட்	டு	■	9 ல	ட்	ச	ம்
த்	■	■	10 கு	11 ட	ம்	■	■	■
12 தி	கி	ல்	■	ம்	■	லி	■	ர்
யா	■	■	■	ட	■	ல்	■	ல
ர்	யி	13 த	■	ம்	ர	14 தி	ந்	15 ம

வலியுறுத்திச் சொல்லியிருந்தான்.

'கடவுளே! இத்தனை ரகசியமாகத் திட்டமிட்டுப் புறப்படும் காரியம் நல்ல படியாக முடிய வேண்டும்! பன்றித் தீவின் மர்மம் என்னவென்று எப்படியாவது நாங்கள் கண்டுபிடித்தே ஆக வேண்டும். கடற்படை அதிகாரிகளின் உதவியுடன் சமூக விரோதிகளைப் பிடித்தே தீர வேண்டும்' என்று மானசீகமாக வேண்டிக் கொண்டு எட்டு மணிக்கு சாப்பிட உட்கார்ந்தான் பாலு.

"நான் வேணா உன்னை அவங்க வீடு வரைக்கும் கொண்டு போய் விட்டுட்டு வரேன்" என்றார் அப்பா.

திடுக்கிட்ட பாலு, "ஐயோ, அதெல்லாம் வேணாம்பா. நான் என்ன குழந்தையா? பக்கத்துத் தெருவுக்குப் போகத் தெரியாதா?" என்று அவரை அடக்கிவிட்டு அவசர அவசரமாகச் சாப்பிட்டு முடித்தான்.

பாலு கடற்கரை மாதா கோயிலை அடையும்போது மணி சரியாக ஒன்பது. குடுமி வந்திருக்கவில்லை. மிகவும் அமைதியாக இருந்தது சூழ்நிலை.

ஒன்பது பத்துக்குத்தான் குடுமி வந்தான். சொன்ன நேரத்துக்கு ஐந்து நிமிடம் முன்னதாகவே டில்லிபாபுவும் வந்து விட்டான்.

"எல்லாரும் தயாரா? கிளம்பலாமா?"

மூவரும் ஒரு நிமிடம் கண்மூடி கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டார்கள்.


"நாம சின்னப் பசங்கதாண்டா. ஆனாலும் ஒரு நல்ல காரியமாத்தான் கிளம்பறோம். கஷ்டமில்லாம நல்லபடியா முடிச்சிட்டு வந்தா பிள்ளையாருக்குக் கண்டிப்பா ஒரு தேங்காய் உடைக்கணும்" என்று பாலு சொன்னான்.

"சரி, கிளம்புவோம்" என்றான் டில்லி.

மூவரும் அடிமேல் அடி வைத்து கடலை நெருங்கினார்கள். பாலுவுக்கு திக் திக் என்று அடித்துக்கொண்டது. காரணம் விளங்காத பயம் ஒன்று பந்துபோல் மனதுக்குள் சுழன்றது. டில்லியும் குடுமியும் முனைந்து கட்டுமரத்தை இழுத்துத் தண்ணீரில் விட்டார்கள்.

"வாடா, சீக்கிரம் வந்து ஏறு" என்று கத்தினான் டில்லிபாபு.

பாலு நீரில் இறங்கி கட்டுமரத்தைப்



யானைக்கு நுகரும் நரம்புகள் அதன் வாயில் உள்ளதால், வாயினால்தான் யானை வாசனையை நுகருகிறது.

தொகுப்பு: ஜி. ஜெபமாலை

பிடித்து ஏறும்போதே அது ஒரு பக்கமாகச் சரிந்தது.

"டேய், டேய்! பார்த்துடா! நீ ஏறினா கட்டுமரத்துக்கே வலிக்குது போலிருக்கே!"

"பயமா இருக்குடா."

"சீ, பயப்படாம ஏறு. எங்க ரெண்டு பேருக்கும் நீச்சல் தெரியும். கவலைப் படாதே" என்றான் டில்லி.

ஒருவழியாக அவன் கட்டுமரத்தில் ஏறி உட்கார்ந்து ஒரு நிமிடம் ஆசுவாசப்படுத்திக் கொண்டான். அதிகம் அலையில்லாத கடலில் கட்டுமரம் மிதக்கத் தொடங்கிய அதேவேளை-

பாலுவின் அம்மாவுக்குக் கவலை வந்துவிட்டது. "இந்தப் பையனுக்கு ராத்திரி பசிக்குமே! முறுக்கு எடுத்து வெச்சேன். குடுக்க மறந்துட்டேன். நான் ஒரு நிமிஷம் அந்தப் பத்மநாபன் வீடுவரைக்கும் போயிட்டு வந்துடறேன்" என்று பாலுவின் அப்பாவிடம் சொல்லிவிட்டு அவசரமாகப் படியிறங்கினாள்.

தெரு முனையிலேயே குடுமிநாதனின் அம்மா எதிரே வருவதைப் பார்த்தாள்.

"யாரு? பாலு அம்மாவா? எங்க பையன் உங்க வீட்டுக்குத் தானே வந்திருக்கான்? படிக்கப் போறேன்னு சொல்லிட்டு புத்தகத்தை மறந்துட்டுப் போயிட்டான். அதைத்தான் எடுத்துக்கிட்டு வந்தேன். நீங்க குடுத்துடறீங்களா?" என்று கேட்டாள்.


"என்னது!" என்று அதிர்ந்து நின்று விட்டாள் பாலுவின் அம்மா

(தொடரும்)

கிளிகள்

ஆழி——

கிளிகளில் சுமார் 500 வகைகள் இருக்கின்றன. இவற்றில் 8 வகைகள் தவிர மற்றவை சிறிய உருவம் கொண்டவை. கிளிகள் பெரும்பாலும் தாவர இரையையே உட்கொள்கின்றன.



மிகவும் சிறிய கிளிகள் 6 செ.மீ. நீளம் உள்ள நியூகினியா பிக்மி கிளிகள்.







மிகவும் பெரிய கிளிகள் அமேசானில் உள்ள 'மக்கா' கிளிகள். மூக்கிலிருந்து வால் நுனிவரை சுமார் 95 செ.மீ. நீளமும், சுமார் 2 கிலோ எடையும் இருக்கும்! இந்தக் கிளிகள் மரப் பொந்துகளில் தாய், தந்தை, குஞ்சுகள் என குடும்பமாகச் சேர்ந்தே வாழ்கின்றன. சுமார் 15 ஆண்டுகள் கூட சேர்ந்து வாழ்வது உண்டு! இந்தவகைக் கிளிகள் அடிக்கடி ஈரக் களிமண்ணை யும் தின்கின்றன! களிமண்ணில் உப்புச் சத்தும் தாதுப் பொருள்களும் இருப்பதுடன் அது ஒரு நஞ்சு முறிக்கும் பொருள் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர் கள். நியூஸிலாந்து 'மக்கா' கிளிகள் முயல்கள், சிறிய ஆட்டுக் குட்டிகள் முதலியவற்றைக் கொன்று அவற்றின் உடலில் உள்ள கொழுப்புப் பகுதிகளைத் தின்கின்றன!




கிளிகள் பெரும்பாலும் மரப் பொந்துகளில்தான் முட்டை யிடுகின்றன. இந்த முட்டை 5 வாரங்களில் குஞ்சாகும். முட்டை யிட வசதி இல்லாவிட்டால் கிளிகள் முட்டை யிடுவதும் இல்லை; அடை காப்பதும் இல்லை. வீட்டில் வளர்க் கப்படும் கிளிகளும் முட்டை யிடுவதில்லை!



'லாரி' என்னும் கிளி இனம் ஆஸ்திரேலியா, நியூகினி, பசிபிக் தீவுகள் ஆகிய நாடுகளில் வாழ்கிறது. அந்தக் கிளியின் இரை பூவில் உள்ள தேனும், பழச் சாறுகளும். அதற்கு ஏற்ப அதன் நாக்கு சிறு குஞ்சம் போல் இருக்கும்.





கிளியின் மேல் அலகு மண்டை ஓட்டுடன் ஒரு மூட்டு இணைப்பாக இணைக்கப்பட்டிருக்கிறது. அதனால் மற்ற பறவைகளை விட கிளிக்குக் கடினமான பொருள்களை உடைத்துத் தின்ன அதிக வசதி கிடைக்கிறது.



கிளி இனங்களில் நன்றாகப் பேசக்கூடியது ஆப்பிரிக்க சாம்பல் நிறக்கிளி. இது சுமார் 35 சொற்களை நினைவில் வைத்துக்கொண்டு பேசும்! இந்தக் கிளிகளில் ஆணும் பெண்ணும் ஜோடி சேர்ந்துவிட்டால் அவை பிரிவதே யில்லை! அவற்றில் ஒன்று இறந்துவிட்டால் மற்றதும் சில நாட்களில் இறந்துவிடும்!

'கக்காட்டு' என்னும் கிளிகள் சுமார் 80 ஆண்டுகள் உயிர் வாழக் கூடியவை. 1925-ஆம் ஆண்டு லண்டன் மிருகக் காட்சி சாலைக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு கக்காட்டு 1982 வரை வாழ்ந்தது. ஆனாலும், கான்பூரில் ஒருவரிடம் இருந்த ஒரு கிளியின் வயது 100 ஆண்டுகள்!






நியூசிலாந்தில் உள்ள 'ககாபோ' என்னும் கிளி இனத்தால் வானத்தில் பறக்க முடியாது. இரவில்தான் வெளியில் கிளம்பும். தரையில்தான் இரை தேடும். சில தாவரங்களையும் பூவில் உள்ள தேனையும் இரையாகக் கொள்ளும். எப்போதாவது மரத்தில் தொத்திக் கொண்டிருக்கும்.



உலகிலேயே அதிக விலை மதிப்புள்ள கிளி இனம் 'ஷியர்ஸ் மக்கா'. உலகில் இவற்றின் மொத்த எண்ணிக்கையே சுமார் 100தான்! அதனால்தான் ஒரு கிளியின் விலை சுமார் 3 லட்சம்!



இந்தியப் பச்சைக்கிளிகளில் ஆண்கிளிக்கு மட்டும் கழுத்தில் ஒரு வளையக் கோடு இருக்கும்.

வீட்டுக்கும் நாட்டுக்கும் சேமிப்பு அவசியம்!

எங்கள் எண்ணங்கள்...

பள்ளிக்குச் செல்லும்போது தினமும் எனக்கு என் பெற்றோர் சிறிது பணம் கொடுத்து அனுப்புவார்கள். நான் அதில் சிக்கனமாக செலவு செய்துவிட்டு மீதியை நான் வைத்திருக்கும் உண்டியலில் போட்டு வருகிறேன். இந்த என் சேமிப்பு எனக்கு மட்டுமல்ல, என் பெற்றோருக்கும் அவ்வப்போது பேருதவியாயிருக்கிறது. வீடுகளில் 'சார்ஜ் லைட்' பயன்படுத்துகிறோம். அந்த லைட்டிற்கு ஏற்கனவே மின்சாரத்தை 'சார்ஜ்' செய்து வைத்திருப்பதால் இரவில் மின்வெட்டு ஏற்படும்போது அதனைப் பயன்படுத்திக் கொள்கிறோம். சிறிது நேர மின்வெட்டிற்கே நாம் முன்னெச்சரிக்கையுடன் செயல்படும்போது, பிற்கால வாழ்க்கையை செம்மையாக வைத்துக் கொள்ள சேமிப்பு மிக அவசியமல்லவா? ஆதலால் மாணவர்கள் கட்டாயம் சேமிக்க வேண்டும்.

- எஸ். அபிராமி, காயக்காடு

மாணவர்களுக்கும் சேமிப்பு அவசியமானது. சிலர் கேட்கலாம், வசதி படைத்த மாணவர்களுக்கு பாக்கெட் மணி அதிகமாக கிடைப்பதால் அவர்கள் சேமிக்கலாம். ஆனால் ஏழை மாணவர்கள் எப்படி சேமிக்க முடியும்? என்று. அவர்களுக்கு எப்பொழுது பணம் கிடைக்கிறதோ அப்போது சேமிக்கலாம். 'சிறுதுளி பெரு வெள்ளம்' ஆகையால் அவர்களுக்கு அந்தப் பணம் அவசர தேவைக்குப் பயன்படும். நாம் சிறுவயது முதலே சேமித்தால்தான், நாளை நம் சம்பாத்தியத்தைச் சேமிக்கத் தோன்றும். எனவே மாணவர்களுக்கு சேமிப்பு அவசியம்.

- டி.ஆர். பாலாஜி, மதுரை

சிறு சேமிப்பு என்பது எல்லோருக்கும் பொருந்தக்கூடிய நல்ல பழக்கம். அதை எங்களைப் போன்ற சிறுவர்களிலிருந்தே ஆரம்பிப்பதுதான் நல்லது. சிறுசேமிப்பால் வீடு மட்டுமின்றி நாடே உயரும். எங்கள் வீட்டில் சஞ்சைகா, உண்டியல் என்று ஆளுக்கொரு வகையில் பணத்தைச் சேமிக்கிறோம். இதனால் இக்கட்டான சூழ்நிலைகளின்போது சுலபமாகச் சமாளிக்க முடிகிறது.

- என்.ஆர். அருணா, சூரமங்கலம், தஞ்சை மாவட்டம்.

மாணவர்களுக்குக் கண்டிப்பாக சேமிக்கும் உணர்வு வேண்டும். சேமிப்பு என்பது துன்பக் கட்டத்தில் இன்பக் கொடி பறக்க



விடும். சிறுதுளி பெரு வெள்ளம். எப்படியும் அப்பா, அம்மா நமக்கு வாங்கித் தர வேண்டிய பொருளுக்காக இருக்கட்டுமே என்று கூடுதலாக தருவதும், சாமான்கள் வாங்கி வர டிப்ஸ் கிடைப்பதும், நம்மால் அப்படியே சேமிக்கப்படும் பட்சத்தில் தாய், தந்தையரால் சமாளிக்க முடியாத எதிர்பாராத செலவு வரும் பட்சத்தில் நமது சேமிப்பு நம்மையும் காத்து சமயத்தில் வீட்டையும் காக்குமே!

- ஆர்.ஜி. காயத்ரி, பதினோராம் வகுப்பு
உ.இ.மேல்நிலைப் பள்ளி,
திசையன்விளை

புத்திசாலி காக்கை!

நெட் பிட்ஸ்

காகம் ஒன்று, தண்ணீர் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளுவதற்காக, ஜாடியின் அடியில் இருந்த தண்ணீரில் கூழாங்கற்களைப் போட்டு, தண்ணீர் மேலே வந்தவுடன் அதைக் குடித்து தாகத்தைத் தீர்த்துக் கொண்டது என்ற பஞ்சதந்திரக் கதை எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் இந்தக் கதையில் வரும் காகத்தைப் போல நிஜத்திலும் காகம் அறிவு கூர்மையான பறவைதான் என்பது ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் விலங்கியல் துறை ஆராய்ச்சியாளர்கள், நடத்திய ஆராய்ச்சி மூலமாகத் தெரிய வந்துள்ளது.

விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள், விளையாட்டு பொம்மை போன்ற சிறு பக்கெட் ஒன்றில் இறைச்சித் துண்டைப் போட்டு, ஓர் உயரமான சிலிண்டர் போன்ற பாத்திரத்தில் வைத்து விட்டனர். அங்கே வந்த காகம், உள்ளே இருந்த இறைச்சித் துண்டை எடுக்க விரும்பியது. அதனால் எட்டி எடுக்க முடியவில்லை. சிறிது நேரத்தில் புத்திசாலித்தனமாய் ஒரு காரியம் செய்தது. பக்கத்தில் கிடந்த நீண்ட கம்பி ஒன்றை எடுத்து தரையில் தட்டி தட்டி, முனையை சிலிண்டருக்குள்ளே விட்டு, இறைச்சித் துண்டு வைக்கப்பட்ட பொம்மை பக்கெட்டை அப்படியே அலாக்காக வெளியில் தூக்கிவிட்டது!

அடுத்து குட்டித் தகவல்கள்

● உலகில், உங்கள் பிறந்த நாளன்றைக்கே தங்களது பிறந்த நாளையும் கொண்டாடுபவர்கள் சுமார் ஒரு கோடி பேர்.

● ஆங்கில மொழியில் பத்து லட்சம் வார்த்தைகள் இருக்கின்றன. ஜெர்மானிய மொழியில் ஒரு லட்சத்து எண்பதாயிரம் வார்த்தைகள். ஃபிரெஞ்சு மொழியில் ஒரு லட்சம் வார்த்தைகள்தான் உள்ளன.

● கால்ஃப் பந்தின் மையப் பகுதியில் தேன் பயன்படுத்தப்படுகிறது.

● பூமியில் ஒரு நாளைக்கு இருபத்து நாலு மணி நேரம் இருப்பதுபோல, ஜுபிடர் கிரகத்தில் ஒன்பது மணி, ஐம்பது நிமிடம், முப்பது விநாடி கொண்டது ஒருநாள்.

● பச்சோந்தியின் நாக்கு, அதன் உடலின் நீளத்தைவிட நீளமானது.


ஊட்டி போன்ற ஊர்களில் உள்ள பெரிய பூங்காக்களில் மிருகங்களின் உருவத்தில் செடிகள் வெட்டி விடப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இங்கே கலையழகு மிளிரும் ஒரு பூங்கா உங்களது ரசனைக்கு.



இது ஒரு புதிர். ஒரு நியூஸ் பேப்பர் பிரித்து வைக்கப்பட்டுள்ளது. ஒரு பாதியில் ஒருவர் நின்று கொண்டு இருக்கிறார். இன்னொரு பாதியில் இன்னொருவர் நின்று கொண்டு இருக்கிறார். இருவருக்கும் இடையில் மிகக் குறைந்த இடைவெளிதான் என்றாலும் ஒருவரையொருவர் கைநீட்டி தொட்டுக் கொள்ள முடியவில்லை. இது எப்படி சாத்தியம்? உங்கள் மூளையை லேசாகக் கசக்கி கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்! (விடை: கடைசியில்)

அடுத்து நம் கைரேகை குறித்த சில அபூர்வமான தகவல்களைப் பார்க்கலாமா?

ஒருவருடைய ஒருவிரல் ரேகையைப் போல இன்னொரு விரலின் ரேகை

இருக்காது. பத்தும் பத்து விதம். ஒருவருடைய விரல் ரேகை, அவருக்கு மட்டுமே பிரத்யேகமானது. பிறப்பு முதல் இறப்பு வரை ஒருவருடைய விரல் ரேகையில் எந்த விதமான மாற்றமும் இருக்காது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே சீனர்களுக்கு இந்த விவரம் தெரிந்திருந்தது. அதனால் தான், சீன மன்னர்கள், முக்கியமான அரசாங்க தஸ்தாவேஜுகளில் தங்கள் கட்டைவிரல் ரேகையைப் பதிவு செய்வதை வழக்கமாகக் கொண்டு இருந்தனர்.

1892ல் ஆங்கிலேய விஞ்ஞானியான சர்ஃபிரான்சிஸ் கால்டன்தான், கைரேகையின் பிரத்யேகத் தன்மையை விஞ்ஞானபூர்வமாக நிரூபித்தவர். சர் எட்வர்டு ஹென்றி என்பவர்தான், இதைப் பயன்படுத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியும் என்று கண்டுபிடித்தவர். இன்று உலகளாவிய முறையில் குற்றவாளிகள் கைரேகை மூலம் கண்டுபிடிக்கப்படுகிறார்கள்.

மேலே ஒரு வாண்டு தலையை எடுத்து தரையில் வைத்துக் கொண்டு இருக்கிறதே என்று ஆச்சரியப்படாதீர்கள். குனிந்து கொண்டிருப்பதும், மண்ணுக்கு வெளியே தலையை நீட்டிக் கொண்டு, மண்ணில் புதைந்து இருப்பதும் இரண்டு சிறுவர்கள்! எப்படி இந்த டிரிக்?

விடை: ஒரு வாயிற்படியில் நியூஸ் பேப்பர் போடப்பட்டு, ஒரு பாதி ஒருபுறமும், மறுபாதி இன்னொரு புறமும் உள்ளது. கதவு மூடப்பட்டு, இரண்டு பக்கத்திலும் இருவரும் நிற்கிறார்கள். அப்புறம் எப்படி ஒருவரை ஒருவர் தொட்டுக் கொள்ள முடியும்?

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி



கடிதங்கள்

அசத்தல் போட்டி; அருமையான பரிசுகள்!

✉ 'ஒலிம்பிக் போட்டியில் இந்தியா பதக்கம் வெல்லுமா?' என்று எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தச் சமயத்தில் எங்களுக்கு அசத்தலாகப் போட்டி அறிவித்து, அருமையான பதக்கங்கள் தரும் கோகுலத்துக்கு சபாஷ்!

- கே. பரணிதரன், என். ராஜேஷ்,
அ.மே.நி.பள்ளி, கோவில்பட்டி

✉ முதல் பரிசு பெற்ற 'சொட்டு நீர்ப் பாசனம்' கதை மிகவும் அருமை. கிராமத்தில் பயன்படுத்தப்படும் சொட்டு நீர்ப் பாசனத்தை விளக்கியதுடன், தண்ணீர் அதிகமானால் களைகள் நிறைய முளைத்து செடிகள் வீணாகும். அதே போல நம்மிடம் பணம் நிறைய இருந்தால், நாம் வேண்டாத நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு கெட்டுப் போய்விடுவோம் என்பதை மாணவர்களுக்கு உணர்த்தியது பாராட்டத்தக்கது.

- ஆர்.எஸ். லக்ஷ்மி, மதுரை

✉ கொட்டும் அருவி ஓவியங்கள் மிக நன்றாக இருந்தன. 'மந்திர விதைகள்', 'கொக்கரக்கோ...கோ', 'துரோகிகளை வென்றவர்', 'பலசாலி' படக்கதைகள் படிக்கவும், பார்க்கவும் அருமை!

- திருச்சி ராஜிராதா

✉ கோடை விடுமுறைப் போட்டியில் பரிசுக்குரியவளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதற்கான பரிசுத்தொகை பெற்றுக் கொண்டேன் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். என் போன்ற மாணவர்களை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதில் 'கோகுலம்' இதழுக்கு நிகர் யாருமில்லை.

- ப. சிவசங்கரி,
மன்னார்குடி



✉ மினரல் வாட்டர் எப்படி எல்லாம் சுத்திகரிக்கப்பட்டு, கடைசியில் கேன்களிலும், பாட்டில்களிலும் நிரப்பப்பட்டு நமக்கு வருகிறது என்று எங்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொன்னதற்கு நன்றி.

- ஆர். அம்பிகா,
மதுரை.

✉ துரோகிகளை வென்றவர் படக்கதை சிறந்த சிந்தனை விருந்து. விரோதிகள் அழியவில்லை; விரோதம் மட்டுமே அழிந்தது என்ற தத்துவத்தின் மூலம் அஹிம்சையும் சமாதானமும் கொடி கட்டிப் பறக்கிறது. சூப்பர் கதை!

- ஆர்.ஜி. உமா, திசையன்விளை


ஓவியப் போட்டி



கொடியில் படர்ந்த திராட்சையைப் பார்க்கும் வாய்ப்பு எல்லோருக்கும் இருந்திருக்காது. ஆனால் திராட்சைப் பழங்களை எல்லோரும் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: **திராட்சைப் பழங்கள்.** திராட்சைக் கொடியிலோ, கடைகளிலோ, வீட்டிலோ, கையிலோ.... இப்படி எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். படம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி : **9.8.2004**



சேவல் கூவினால்தான் பொழுது விடியுமா?



அன்புள்ள ஜக்கு...

● ஆர். சந்திரா, மேலப்பாளையம்

? மரச் சாமான்கள் செய்ய தேக்குமரத்தை ஏன் விரும்புகிறார்கள் ஜக்கு?

காரணம் அதன் உறுதித் தன்மைக்காகத்தான்! வெயிலோ, மழையோ தேக்கு மரத்தை அதிகம் பாதிக்காது. ஒருவகை எண்ணெய்ப் பசை இருப்பதால் ஈரத்திலிருந்து இது பாதுகாக்கப்படுகிறது. தேக்கு மரத்தைச் செல் அரிக்காது; உளுத்துப் போகாது. நீண்ட நாட்கள் உழைக்கக் கூடியது.

● வே. சுபஸ்ரீ, நல்லூர்.

? சேவல் கூவினால்தான் பொழுது விடியும் என்று எங்கள் தமிழாசிரியர் கூறுகிறாரே, உண்மையா ஜக்கு?

சேவல் கூவாவிட்டாலும்கூட பொழுது விடியத்தான் செய்யும் சுபஸ்ரீ. ஒரு சேவலை இருட்டறையில் இரவு, பகல் தெரியாமல் வைத்திருந்தாலும்கூட அது அதிகாலை நேரத்தில் 'கொக்கரக்கோ... கோ...' என கூவும். இந் நிகழ்வுக்குப் பெயர்தான் உயிர்க் கடிகாரம் (Biological clock) என்கின்றனர்.

● அ. தமிழ்க்குமரன், வில்லரசம்பட்டி

? நம் நாட்டில் தற்போது பொதுநல சேவையில் ஈடுபாடு உடையவர்கள் உண்டா ஜக்கு?

என்ன இப்படி கேட்டுவிட்டீர்கள் தமிழ்க் குமரன்! நமக்கெல்லாம் தெரிந்து கொஞ்சம் பேர்தான் இருக்கிறார்கள். வெளி உலகத் துக்குத் தெரியாமல் எவ்வளவோ பேர் சமூக சேவையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

● வி. பிரசாந்த், மைலாப்பூர்

? சுற்றுப்புறச் சூழல் குறித்து நம் மக்கள் அவ்வளவாக அக்கறை காட்டுவதில்லையே ஏன் ஜக்கு?

மக்கள் தொகை பெருக்கம், கல்வியறிவு இல்லாமை, சுற்றுச்சூழல் குறித்து போது மான விழிப்புணர்வு சென்று சேராமல் இருப்பதுதான் இதற்குக் காரணம்.

● ஆர். கண்மணி, புதுவை

? எனக்கு கணிதம் என்றால் அல்வா சாப்பிடுவது போல்... உனக்கு எந்தப் பாடம் பிடிக்கும் ஜக்கு? (எல்லாம் பிடிக்கும் என்ற பதிலைச் சொல்லாதே.)

பாடத்தில் மட்டுமின்றி பொதுவாக எனக்கு மிகவும் பிடித்த சப்ஜெக்ட் அறிவியல்தான். அறிவியல் புத்தகங்களைத் தேடித் தேடிப் படிப்பேன். அப்படி படிப்பதால்தான் உங்களுடைய புத்திசாலித் தனமான கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்ல முயற்சிக்கிறேன்.


கோகுலம்
போஸ்டர்



சனத் ஜெயசூர்யா

"ஒரு ரகசியம்"

நினைவில் நின்றவை...

பிரிக்க முடியாதது...

என் சிறிய வயதில் எனக்கு சகாய ராணி என்ற அருமையான தோழி உண்டு.



நாங்கள் இருவரும் மிகவும் ஒற்றுமையுடன் இருப்போம். எங்களைச் சேர்த்தே பார்த்துப் பழக்கப்பட்ட எங்கள் பள்ளியின் வாட்ச்மேன் பொன்னுசாமி, "பிரிக்க முடியாதது எதுவோ? சகாயராணியும், அருள்ராணியும்" என்பார், திருவிளையாடல் தருமி போல். நாட்கள் நகர்ந்தன. இருவரும் வெவ்வேறு திசைகளில் பிரிந்துவிட்டோம். இன்றும் சகாய ராணியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல், ஆனால் விலாசம் தெரியாது. ஆகவே யாருமே விலாசத்தைத் தொலைத்துவிட்டு என்னைப் போல் வருத்தப்படாதீர்கள்.


- ஜி. அருள்ராணி, மதுரை

காந்திக்கு மரியாதை!

என் அக்கா காந்தி வேடமேற்றிருந்தார் மாறுவேடப் போட்டிக்கு. அக்காவின் தோழிகள் கண்ணகி, டீச்சர், குறத்திகளாக ஜொலித்தார்கள். என் அக்காவுக்கு



மொட்டை போட்டிருந்ததால் காந்தி வேடம் போட்டு விட்டார்கள். அக்கா ஓவென அழுத படியே இருந்தாள். அம்மா "ஏன் அழு கிறாய்?" என்றார். அதற்கு அக்கா "அவங்க எல்லாம் லிப்ஸ்டிக் போட்டிருக்காங்க. எனக்கும் போட்டு விடுங்க" என்று கூறி அழுதாள். அம்மா, "காந்தியடிகள் எளிமையானவர். ஆடம்பரங்களை விரும்பாதவர். லிப்ஸ்டிக் போடாவிட்டால்தான் காந்தியடிகள் அழகு. நீயே பாரு இன்னும் கொஞ்ச நேரத்தில் காந்திக்கு கிடைக்கும் மரியாதையை" என்றார். விழா மேடைக்கு அக்கா செல்ல வேண்டிய நேரம் இந்திரா காந்தி வேடமணிந்த சிறுமி அக்கா காந்தியுடன் மேடையேறினார். அந்த நேரம் 'ரகுபதி ராகவ ராஜாராம்' பாடல் ஒலிக்க விழாத் தலைவர் உட்பட அனைவரும் எழுந்து நின்று பாடலுக்கும் காந்திக்கும் மரியாதை செலுத்தினர். அப்பொழுது காந்தி பற்றித் தெரியாத அக்கா



இப்பொழுது காந்தியாக நடித்து எடுத்த போட்டோவைப் பார்த்து பார்த்து மகிழ்கிறாள்.

- அ. டேனியல் லியோ பிரபு, மதுரை

சித்தப்பா, சித்தி...

இரண்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது அன்று ஆசிரியர் ஆத்திச்சூடியிலுள்ள 'தந்தை தாய்ப்பேண்' பாடலை நடத்தினார். "அப்பா, அம்மாதான் உங்களை வளர்த்து படிக்க வைப்பது. அதனால் அவர்கள் இருவரையும் நீங்கள் நன்றாகப் படித்து

சொல்லட்டுமா?"

வேலைக்குப் போய் காப்பாற்ற வேண்டும்'' என்று அப் பாடலுக்கு விளக்கம் சொன்னார். நாங்களெல்லாம் சரி என்றோம். ஒரு மாணவன் மட்டும் ''நான் என் சித்தப்பா, சித்தியைக் காப்பாற்றுவேன்'' என்றான். எங்களுக்கெல்லாம் ஒரே சிரிப்பு. உடனே அவன், ''எனக்குத்தான் அம்மா, அப்பா இல்லையே. எனக்கு இப்போது எல்லாம் செய்வது சித்தப்பா, சித்திதான். அதனால்தான் அப்படி சொன்னேன்'' என்றான்.



அவன் சொன்னதில் அப்பா, அம்மா இல்லை என்ற சோகம் இருந்தாலும் அவனின் பரந்த உள்ளம் எல்லோரையும் சிலிர்க்கச் செய்தது.

- ப. ராமகிருஷ்ணன், காயக்காடு

ரகசியம்!

என் நான்கு வயது தம்பி இரவில் உறங்கும்போது, அப்பாவிடம், ''அப்பா! எனக்கு ஒண்ணுக்கு வருது'' என்று உரக்கச் சொல்லி அடிக்கடி எழுப்பிக் கொண்டிருப்பான். இது அடுத்தவர்களுக்குத் தொல்லையாக இருந்தது. இதை அறிந்த அப்பா தம்பியிடம் ''இனிமேல் ஒண்ணுக்கு வருதுன்னு சொல்லாதே. ஒரு ரகசியம் சொல்லணும்னு சொல், நான் புரிஞ்சிக்கறேன்'' என்றார். தம்பியும் அதன்பின் அப்படியே சொல்லி வந்தான். ஒரு நாளிரவு அப்பா ஏதோ வேலையாக வெளியில் சென்றிருந்தார். தூக்கத்திலிருந்து எழுந்த தம்பி அருகில் படுத்திருந்த மாமாவை உலுக்கி, ''நான் ஒரு ரகசியம் சொல்லணும்'' என்றான். உண்மையை அறியாத மாமா ''என் காதருகே வந்து மெதுவாகச் சொல்'' என்றாரே பார்க்கலாம்!

- எம்.ஏ. ரிஸ்னா பரகத்
மாவனல்லை, இலங்கை

வெள்ளைப் பசு

கோடை விடுமுறையைக் கழிக்க, புது தில்லிக்குச் சென்றிருந்தோம். அங்கு ஸூரஜ் குண்ட் என்றொரு இடமுண்டு. இங்கு பழங்கால சூரியன் கோயில் ஒன்றின் எஞ்சிய இடிபாடுகள் மட்டும் உள்ளது. ஆள் நடமாட்டம் அதிகமில்லாத பகுதி. மரத்தடியில் காளைகளும், பசுக்களும் அசை போட்டபடி. இடம் ரம்யமாக இருந்தது. ஒரு சிறுவன் கோயிலுக்கு வழிகாட்ட முன் வந்தான். நான்கு அடி எடுத்து வைத்திருப்போம். பசு ஒன்று துரத்தத் துவங்கியது! அப்பா கற்களைத் தேடினார். ஒன்றுகூட கிடைக்கவில்லை! அலறியடித்துக் கொண்டு ஓடினோம். எங்களுடன் அந்தச் சிறுவனும் இரு தண்ணீர் கேன்களைத் தூக்கியவாறு ஓடினான். நாங்கள் பிரிந்து நான்கு திசைகளில் ஓட முற்பட, பசு நிதானித்தது. பின்பு அந்தச் சிறுவனைத் துரத்தியது. அவன் கேன்களைக் கீழே போட்டு விட்டு, ஓடி, ஒரு பெரிய புதரை இருமுறை சுற்றி, நாங்கள் இருந்த இடத்திற்குப் பாதுகாப்பாக வந்துவிட்டான். பசு



அங்கேயே நின்றுவிட்டது. கை, கால்கள் உதறல் எடுக்க நாங்கள் சிறுவனுடன் டாக்ஸிக்கு வந்து சேர்ந்தோம். அன்றிலிருந்து பசு என்றால் பயம்!

- ந. பூஷாவளி, சேலையூர்



கூடு தேடும்





""கு**க் கூக்" "குக் கூக்" என்று சந்தோஷமாகப் பாடிக் கொண்டு அலைந்த குயில் கோமளவல்லியைப் பொறாமை கொண்ட காகம் அழைத்தது.

"குரலால் இனிமையானவள்தான் நீ. ஆனாலும் குடியிருக்க என் போன்ற கூடு ஒன்று உனக்குண்டா? கூடே இல்லா உனக்கேதான் இந்தப் பாட்டு மட்டும் எதற்காமோ?" என்று கிண்டல் செய்தது.

அதுவரை தனக்கு கூடு இல்லை என்பதைப் பற்றி அறியாது சந்தோஷமாக இருந்த குயில் கோமளவல்லிக்கு காகம் போன்று அழகான கூடு ஒன்றைத் தனக்கெனக் கட்ட வேண்டும் என்ற ஆசை உண்டானது. அதன் கண்களில் அந்த மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த தூக்கணாங்குருவியின் கூடு தென்பட்டது.

விரைந்து சென்ற குயில் கோமளவல்லி தூக்கணாங் குருவியின் கூட்டின் முன்னால் சென்று தூக்கணாங்குருவி துரையண்ணனை அழைத்தது.

''தூக்கணாங் குருவி துரையண்ணா
தூய வாழ்வு உனக்கண்ணா

குயில்!


பா.முருகேசன்

பாக்கள் பாடும் எனக்கண்ணா
பாங்காய் கூடு இல்லையென
காக்கை கருப்பன் சொன்னாண்ணா
கவலையை ஊட்டிச் சென்றாண்ணா
ஏக்கம் கொண்டே நானண்ணா
உன் கூட்டைத்தேடி வந்தேண்ணா
உறக்கம் கொண்டே நானண்ணா
உயர்ந்த கூட்டை இங்கண்ணா
ஆக்கும் வழியைக் கூறண்ணா
அன்புடன் நானும் கேட்டேண்ணா
ஆக்கிக் கொள்வேன் கூடண்ணா
ஆயிரம் நன்றிகள் உனக்கண்ணா!"
என்று அலறியது.

குயில் கோமளவல்லியின் ஏக்கம் கலந்த குரலைக் கேட்டு இரக்கம் கொண்ட தூக்கணாங்குருவி குயிலுக்கு உதவ எண்ணம் கொண்டது.

"கூவும் குயிலே
கோமளவல்லி - உன்
கூச்சம் கொஞ்சம் தள்ளி வைத்து
பூவுடன் காய்த்து கிடக்கின்ற
பெரிய தென்னை கீற்றெடுத்து
தாவிப் பறக்கும் என்னிடம்தா
தக்க விதமாய் அதனைநான்
அலகால் கோர்த்து அழகான
கூடாய் மாற்றித் தந்திடுவேன்
ஆவல் கொண்டே நீயதனில்
அன்புடன் வாழ்வை நடத்திடலாம்"
என்று கூறியது.

இதுகேட்ட கூவும் குயில் கோமள வல்லி உடனே விரைந்து சென்று உயர





மாக வளர்ந்திருந்த தென்னை மரத்தை அடைந்தது.

தென்னை மரத்திடம் தான் வீடு கட்ட விரும்புவதையும் தூக்கணாங்குருவி வீடு கட்ட தென்னங்கீற்றைக் கொடுத்து உதவியது போல தனக்கும் கீற்றை தந்து உதவ வேண்டும் எனக் கேட்டது. கோமளவல்லியின் வேண்டுகோளைக் கேட்ட தென்னை மரம் கூறியது :

"கோமளவல்லி குயிலே உன் - மனக்
குறையைத் தீர்க்க இயலாதே!

பாவம் குருவி உன்னிடமே
காட்டிய பாதை தவறேதான்
குருவியின் கூடோ மிக எளிது
கிளையில் தொங்கும் அது சிறிது
பருத்த உன் உடலையது
தாங்கிட இயலாது நீ உணரு
விரும்பும் கூட்டை நீ அடைய
வேறு இடத்தைத் தேடிப்போ!''

தென்னையின் மொழியில் உண்மை இருப்பதாக நம்பிய குயில் கோமளவல்லி தாகம் தீர நீர் அருந்தியபின் அந்தக் குளக் கரையில் மெதுவாக நகர்ந்து கொண் டிருந்த நத்தை ஒன்றைக் கண்டது. நத்தையின் உடலில் பாதுகாப்பாக இருந்த கூட்டினைக் கண்ட குயில் கோமளவல்லி தனக்கும் அது போல கூடு இருந்தால் நன் றாக இருக்குமே என்ற ஆசை உண்டா னது.

விரைந்து நத்தையிடம் சென்ற குயில் கோமளவல்லி அதனிடம்,

''நகரும் நத்தை நல்லானே
நல்லவன் உன்போல் யாரண்ணே!
சுகமென நீயும் சுமக்கின்ற
கூடும் ரொம்ப அழகண்ணே!
தகவாய் எனக்கும் இதுபோல
தகுந்த கூடு ஒன்றைத்தான்
ஆக்கும் வழியைக் கூறண்ணே!
அகமும் மகிழ அதுகேட்டு
ஆக்கிக் கொள்வேன் கூடெனக்கு!''

குயில் கோமளவல்லியின் பேச்சைக் கேட்ட நத்தை நல்லான்,

''குயிலே குயிலே கோமளவல்லி
குரலில் இனிமை தருவாய் அள்ளி
வலிமையான கூடொன்றை
வாங்கிக் கொள்ள வழியுண்டு



நலிந்த உடலே எனக்குண்டு
நான் பெற்றகூடும் மெலிதேதான்
பொலிவுடன் கூட்டை என்தமையன்
புதிய ஆமை பெற்றுள்ளான்
வலிந்து நீசென்று அவனைத்தான்
வழியைக் கேட்டு சென்றேதான்
அழிவில்லா கூட்டைச் செய்துகொள்
அதுதான் நல்லது புரிந்துகொள்''

நத்தை நல்லானின் ஆலோசனையின்படி குயில் கோமளவல்லி ஆமை ஆனந்தனைத் தேடி அலைந்தது. குளத்தின் மறு கரையில் இருந்து மீன்களைப் பிடித்துக் கொண்டிருந்த கொக்கு கோகிலாவைக் கண்ட குயில் கோமளவல்லி ஆனந்தனைப் பற்றி விசாரித்தது. கொக்கு கோகிலா ''ஆமை ஆனந்தன் உணவு தேடி காட்டுக்குள் சென்றுள்ளது. இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடும். அதுவரை அங்கேயே இரு'' என்று குயிலிடம் கூறியது.

காத்திருந்த குயில் கோமளவல்லி அந்தக் குளத்தையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் ஆமை ஆனந்தன் அங்கு வந்தது. தன்னைக் காண காத்து நிற்கும் குயிலைக் கண்டதும் விரைந்து வந்து தான் கொண்டு வந்த உணவினை அதற்குக் கொடுத்து பசியாறச் செய்தது. பின்னர் தன்னைத் தேடி வந்த காரணத்தைக் கேட்டது. உடனே குயிலும்,

''ஆமை அண்ணா ஆனந்தா
தேவை எனக்கு கூடண்ணா -
அதுக்கு
தகுந்த வழியைக் கூறண்ணா
நகரும் நத்தை நல்லானே
நட்புடன் உன்னைச் சொன்னானே
நிகரில்லா உன்கூடு போல்
நல்லகூட்டை செய்யும் வழி
பகர்வாய் எனக்கு நீயண்ணா
பாவம் தம்பி நானண்ணா!'' என்றது.

கூறவும் குயில் கோமளவல்லியின் ஆசையை அறிந்த ஆமை ஆனந்தன்

''குயிலே குயிலே கோமளவல்லி
கூட்டைக் கட்ட மனதால் எண்ணி
அயர்வில்லா தேனீயை
அடைந்தேதான்
அழகுகூட்டிற்கு வழியும் கேள்

எந்தன் கூடோ முதுகின்மேல்
இதுபோல் உனக்கு முடியாது
சென்றே அவனிடம் கேட்டுப்பார்
சிறந்த வழியைக் கூறிடுவான்!''



ஆமை ஆனந்தன் கூறியதும் உண்மைதான். அதன் கூடுபோல தனக்கும் இருந்தால் தன்னால் பறக்க இயலாது என்பதை உணர்ந்த குயில் கோமளவல்லி ஆமை ஆனந்தன் கூறியபடி தேனீயைத் தேடி அலைந்தது.

ஒருவழியாக தேனீயைக் கண்டுபிடித்தது. சுறுசுறுப்பாக ஒவ்வொரு மலரிடமும் சென்று தேன் சேகரித்துக் கொண்டிருந்த தேனீயைக் குயில் அழைத்தது:

''தேனெடுக்கும் தேனக்கா - உன்
தேனே உலகின் உயர்வக்கா
கூவும் குயில் நானக்கா
கொஞ்சம் என்குறை கேளக்கா
நல்ல கூடு ஒன்றைத்தான்
செய்திட எனக்கு ஆசைதான்
குருவியை முதலில் கேட்டேன்நான்
தென்னையைத் தேடிச் செல் என்றான்
தென்னையும் இயலாது எனக்கூற
சின்ன நத்தையை நான் கேட்டேன் - அவன்
சிரித்தே ஆமையைக் காட்டிட்டான்
அந்த ஆமை ஆனந்தன்
அனுப்பி வைத்தான் உன்னிடமே
வாழ்ந்திட எனக்கு கூடு கட்ட
வழியும் எனக்கு கூறக்கா''

ன்றது.

தனக்கு அவசரமாக தேனெடுக்க வேண்டியுள்ளது என்பதால் விரைவாக கூடு செய்யும் வழியைக் கூறுவதாக ஒப்புக் கொண்ட தேனீ விரைவாக கூடுசெய்யும் வழியைக் கூறியது.

''எந்தன் கூடு மெழுகாலே
ஏற்ற வகையில் செய்ததுதான்
அந்தக் கூட்டில் பல அறைகள்
அடுக்கடுக்காய் உள்ளனவாம்
முட்டைகள் இட்டிட ஒரு பகுதி
முழுக் குஞ்சுகள் தங்கிட மறுபகுதி
பட்டுப் போன்ற பூக்களிடம்
பறித்த தேனோ நடுப்பகுதி
ஒட்டி இவற்றைச் சேர்த்ததுதான்
ஒரு கூடாய் உனக்குத் தெரிகிறது
வட்ட வடிவம் இதுபோல
வளர்ந்த உனக்கு ஏற்றதல்ல''
எனக் கூறிவிட்டு பறந்து சென்றது.

கோமளவல்லி குயிலுக்கு, தேனீ கூறியது முழுமையாகப் புரியவில்லை. என்றாலும், ''இதுபோல் கூடு ஏற்றதல்ல'' என்று கூறியது மட்டும் தெளிவாகப் புரிந்தது என்பதால் அது விரைந்து சென்று மீண்டும் தேனீயை நெருங்கி அழைத்தது.


''தேனெடுக்கும் தேனம்மா - நீ
சொன்னது எனக்குப் புரியலம்மா
நானாகவே கூடொன்றை
நல்லவிதமாய் கட்டுவதற்கு
தேன்போல் உன்குரலாலே
தேவையென்ன கூறம்மா?''
என்று மீண்டும் கேட்டது.

''கூடு தேடும் குயிலக்கா
கூடி வாழ்தல் நலமக்கா
தேடும் கூட்டைக் கட்டுதற்கு
தேவை கூட்டு உணர்வக்கா
பாடும் தேனீ என்கூட்டம்
பலரும் கூடி வாழ்வதுபோல்
கூவும் குயிலும் நீயும்உன்
கூட்டத்தோடு சேர்ந்து வா
கூடு கட்டும் வித்தைதான்
சொல்லித் தருவேன் நானுனக்கு''
என்று கூறிவிட்டு பறந்து சென்று விட்டது.

பாவம் குயில் கோமளவல்லி கூடு கட்டுவதற்காக தன் கூட்டத்தை அழைத்து அழைத்து சோர்ந்து போனதுதான் மிச்சம். யாரும் கோமளவல்லியுடன் சேர்ந்து கூடு கட்ட வரத் தயாராக இல்லை. கோமளவல்லி குயிலும் இன்று வரை கூவிக்கூவி அழைத்துக் கொண்டே இருக்கிறது.


7
கிளித் தலை இளவரசி
கதை: குறும்பலாப்பேரிப் பாண்டியன்
படம்: லலிதா
முதலில் செங்கோடன் இசைக்க ஆரம்பித்தான்.
ஆஹா! செங்கோடன் உண்மையிலேயே இசைச் சக்கரவர்த்திதான்! பிரமாதம்!
அடுத்து இசைவேந்தன் வாசித்தான்.
ம்...என்ன ரொம்ப சாதாரணமாக வாசிக்கிறானே!
இருவரும் மாற்றி, மாற்றி நீண்ட நேரம் வாசித்தனர். இறுதியில் -
ஆஹா! அற்புத இசை! இசைவேந்தா, என் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன்.
தாங்களும் இசையில் மிகச் சிறந்தவர்தான். தங்களைத் தோற்கடிப்பது என் நோக்கமல்ல. மந்திர யாழ் எனக்குத்தானே?
ஆமாம்.


இந்த யாழ் செங்கதிர் மன்னருடையது. அவர் மகள் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். இதை வாசித்தால் குணமடைவார்.
உன் நல்ல உள்ளத்தைப் பாராட்டுகிறேன். இனி எப்பொழுது வேண்டுமானாலும் நீ இங்கு வரலாம்.
தங்கள் அன்புக்கு நன்றி செங்கோடரே! தாங்கள் அவசியம் எங்கள் நாட்டுக்கு வருகை தர வேண்டும்.
நான் இப்பொழுதே கிளம்புகிறேன்.
சென்று வா.
இசைவேந்தன் யாழுடன் கடற்கரைக்கு வந்தான். அங்கு ராஜாளி காத்திருந்தது.
இசைவேந்தா, உன் வெற்றிக்கு என் வாழ்த்துகள். புதுவைப் பட்டணம் போக வேண்டுமா?
ஆமாம்.


மறுநாள் புதுவைப் பட்டணத்தை அடைந்தனர்.
ராஜாளியே உன் உதவிக்கு நன்றி. பிறகு சந்திப்போம்.
வருகிறேன்.
அதற்குள் விஷயம் அறிந்து செங்கதிர் மன்னர் அரண்மனை வாயிலுக்கு வந்தார் -
வா, இசைவேந்தா, என் நம்பிக்கை வீணாகவில்லை.
இளவரசியைச் சந்திப்போம் அரசே!
இளவரசியின் அறையில் அமர்ந்து இசைவேந்தன் மந்திர யாழை இசைத்தான்.
இரண்டு மணி நேரம் கழித்து -
அப்பா, அம்மா என் நோய் குணமாகிவிட்டது.
என் உயிர் இப்பொழுதுதான் திரும்பி வந்தது.


அண்ணா, என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி. அதற்குப் பரிசாக இந் நாட்டையே தங்களுக்குத் தருகிறோம்.
ஆமாம் இசைவேந்தா.
மன்னா, எனக்கு நாடு வேண்டாம்; தங்க மாங்கனி தந்தால் போதும்.
அது சாதாரணப் பரிசு...
என் தங்கை யாழினியைக் குணப்படுத்தியதற்குப் பரிசு வேண்டாம். அன்பு ஒன்றே போதும்.
அந்த மாங்கனி இளவரசி பொற்செல்விக்காகத்தான்.
ஆமாம். இதைத் தின்றால் பொற்செல்வி பழைய நிலையை அடைவாள். நீ உடனே புறப்படு. நாங்கள் அடுத்த மாதம் வருகிறோம்.
நன்றி வருகிறேன்.
அடுத்த இதழில் முடியும்.



நீர் வழிப்

கட்டுரை

பழங்காலத்தில் தன் உணவுக்காகவும், காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பு வேண்டியும் காடுகளிலும், மலைகளிலும் மனிதன் அலைந்து திரியத் தொடங்கினான்.

மழைக் காலங்களில் நீர் பெருகி வெள்ளமாகி அதில் வந்த மரங்கள் மற்றும் இலேசான பொருட்கள் மிதக்கக் கண்டான். தண்ணீரில் செல்ல மரங்களின் துணை வேண்டும் என அறிந்தான். மரத்தினை ஒரு கையால் பற்றிக் கொண்டு மறுகையால் நீரை அலைந்து நீரில் தன் முதல் பயணத்தைத் தொடங்கினான்.



மரங்களின் அடிப்பாகத்தைக் குடைந்து தண்ணீரில் மிதக்க வைத்து படகு போன்று அமைத்தான். சிறு சிறு குச்சிகள், மரப்பலகைகளைக் கொண்டு கூடை போன்ற மிதவைகளை உருவாக்கினான். தண்ணீர் உட்புகாவண்ணம் விலங்கின் தோல்களைக் கொண்டு அடிப்பாகத்தைத் தைத்தான். நீரில் பயணித்தான்.

மரப்பலகைகளை ஒன்றிணைத்து ஓடம் எனப் பெயரிட்டான். கடலில் பயணிக்க ஆவல் கொண்டான். காற்றின் ஆற்றலை அறிந்து, அது வீசும் திசையறிந்து அதன்படி ஓடங்களைச் செலுத்தும் முறையறிந்தான். படகைச் செலுத்த காற்றின் விசையால் முடியும் என அறிந்தான். பெரிய அளவிலான தோல் பாய்களை ஓடங்களில் கட்டி காற்றின் உதவியால் நீரில் பயணித்தான்.




சிறிய உருவ அமைப்பிலான புணை, பரிசல், தோணி, ஓடம் போன்றவை குறைந்த தூரப் பயணத்துக்காகவும் திமில், படகு, அம்பி போன்ற சற்று பெரிய அளவிலான உருவ அமைப்பு கொண்டவை நீண்ட கடற்பயணத்துக்காகவும் பயன்படுத்தினான்.

சங்க இலக்கியங்களில்கூட பழங்கால மன்னர்கள் பெரிய அளவிலான வங்கம், கப்பல், நாவாய் போன்றவை மூலம் அயல் நாடுகளுக்குச் சென்று வணிகம் செய்து திரும்பியதாக வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கின்றன.



13ம் நூற்றாண்டு கால கட்டத்தில்தான் கப்பலோட்டிகளுக்கு கடலில் திசை காட்டும் கருவிகள் கப்பல்களில் பொருத்தப்பட்டன. அவற்றின் துணை கொண்டு மாலுமிகள் கப்பல்கள் செல்லும் திசையறிந்தனர். 1786ல் 'ஜேம்ஸ் ராம்ஸே' என்ற அமெரிக்கர் நீராவிப் படகுகளை உருவாக்கினார். இதற்கு அடுத்த ஆண்டில் இரும்புத் தகடுகள் பதிக்கப்பட்ட படகுகளை 'வில்கின்ஸ்ஸன்' என்ற விஞ்ஞானி உருவாக்கி நீரில் செலுத்திக் காட்டினார். இவை கடலலைகளாலும் கடற்காற்றாலும் சேதமடையாமல் நீண்ட காலம் உழைக்கும் தன்மையில் உருவாக்கப்பட்டன.




பயணம்!

வெ.கலிவரதன்

சவண்ணா என்ற நீராவிக் கப்பல் 1812ல் அட்லாண்டிக் பெருங்கடலில் வெள்ளோட்டம் விடப்பட்டது. படகுகளை நீராவி சக்தி கொண்டு இயக்கிய பிறகு கப்பல்களையும் நீராவி சக்தி கொண்டு கடலில் செலுத்த முடியும் என்று அறிந்து 1786ல் 'ராயல் வில்லியம்ஸ்' என்ற நீராவிக் கப்பலை அட்லாண்டிக் பெருங்கடலில் செலுத்திக் கடந்தனர்.

பின்னர் கப்பலின் வேகத்தை அதிகரிக்க வேண்டிய சூழலில் கப்பல்களுக் கடியில் சுழன்று நீரை பின்னோக்கித் தள்ளும் நீர் உருளைகள் அமைக்கப்பட்டன. இதை 'நாவல்ட்டி' படகில் 1838ல் பொருத்தி சோதித்துப் பார்த்து வெற்றி கண்டனர்: இதனால் படகின் வேகம் கூடியது.

போர்க்களங்களில் அதிக சேதத்தை விளைவிக்கும் நாசகாரி கப்பல்கள் விரைந்து செல்லும் ஆற்றல் கொண்டவை: இவை 'குருஸர்கள்' எனப்படும்.



ஆங்கிலேயர்கள் நம்மை அடிமைபடுத்தி ஆண்ட காலகட்டத்தில் வ.உ. சிதம்பரம் பிள்ளை தம்முடைய சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் என்ற கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே 'லாவோ மற்றும் காலியோ' என்ற இரு கப்பல்கள் பயணத்தைத் தொடங்கின.



1922ல் நவீன விமானந்தாங்கிக் கப்பல்கள் உருவாக்கப்பட்டன. கடற்படைகளிலும் சேர்க்கப்பட்டன.

இன்றைக்கு நாம் கப்பல்களை உருவாக்கும் வசதிகளைப் பெற்றிருக்கிறோம். விசாகபட்டினம், மும்பை போன்ற துறைமுகங்களில் நம் நாட்டுக் கப்பல்கள் உருவாக்கப்படுகின்றன.



கடந்த ஜூன் 6ந் தேதி அன்று ஐ.என்.எஸ். சத்புரா என்ற இந்தியப் போர்க்கப்பல் நம் இந்தியக் கடற்படையில் சேர்ந்ததைத் தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்கள் மூலம் அறிந்திருப்பீர்கள். நம் நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட இரண்டாவது பெரிய போர்க்கப்பல் இது. மும்பை 'மஸ்காவன்' துறைமுகத்தில் இருந்து அரபிக் கடலில் தன் முதல் பயணத்தைத் தொடங்கிய இக் கப்பல் 143 மீட்டர் நீளமும் 16.7 மீட்டர் அகலமும் கொண்டது. தரையில் இருந்து தரைக்கும், தரையிலிருந்து வானத்துக்கும் பாயும் ஏவுகணைகள் மற்றும் நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட பெரிய கப்பல் இது.



ஒரு நாள்

தலைமை ஆசிரியர் முன்பு நின்றிருந்தான் தீபக்.

தீபக் பத்தாம் வகுப்பு படிக்கிறான். படிப்பில் மகா கெட்டி.

"படிப்புல எப்படி முதல் இடத்துல இருக்கானோ அதேபோல அரட்டையிலும் முதல் இடத்துல இருக்கான் தீபக். ஆசிரியர்கள் வகுப்புக்கு வராத நேரத்துல சத்தமா பேசி அடுத்த வகுப்புக்குத் தொல்லை கொடுக்கறான். வகுப்பு நடந்துகிட்டு இருக்கறப்ப திடீர்னு ஏதாவது கமெண்ட் அடிக்கறான். அதனால ஆசிரியருக்கு டிஸ்டர்ப் ஆகுது" என்றார் ஓர் ஆசிரியர்.

"அப்படியா? நாளைக்கு அவனை என்னை வந்து பார்க்கச் சொல்லுங்க" என்றார் தலைமை ஆசிரியர்.

அதுதான் இப்போது தீபக் அவர் முன்பு நிற்கிறான். அவர் அவனையே சிறிது நேரம் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு -

"தீபக், நீ ரொம்ப நல்லா படிக்கிறே. உன்னால நம்ம பள்ளிக்கே பெருமை வரப் போகுதுன்னு நாங்க எதிர் பார்த்துட்டு இருக்கோம். ஆனா உன்னோட சில நடவடிக்கைகள் கவலையை உண்டாக்குது. அதை நீ மாத்திக்கணும்" என்றார்.

"நான் எந்தத் தப்பும் செய்யலையே சார்" என்றான் தீபக்.

"படிப்புல முதல் மாணவனா இருந்தா மட்டும் போதாது தீபக். மற்ற விஷயங்களிலும் நல்ல மாணவனா இருக்கணும். உன்னால மற்றவருக்குத் தொந்தரவு ஏற்படக் கூடாது. ஆசிரியர்கள் இல்லாத நேரத்துல வகுப்பில் அரட்டையடிக்கிறீயாமே?" என்று கேட்டார்.

"ஆசிரியர் இல்லாத நேரத்துலதானே சார் பேசறேன். அதுல என்ன சார் தப்பு?"

"என்னவா? வகுப்பை அமைதியா வெச்சுக்கறது ஒவ்வொரு மாணவனுடைய கடமை. ஆசிரியர்கள் பாடம் நடத்தறப்ப கமெண்ட் அடிக்கிறீயாமே?"

"அது சும்மா ரிலாக்ஸ் செய்துக்கத்தான் சார்."

"நீ ரிலாக்ஸ்னு சொல்றே. பாடம் நடத்தற ஆசிரியருக்கு அது தொந்தரவு. தவிர ஆர்வமா பாடத்தைக் கவனிச்சுட்டு இருக்கிற மாணவர்களுக்கு நீ அடிக்கிற கமெண்டால் கவனம் சிதறிடலாம். எல்லோரும் உன்னை மாதிரி புத்திசாலியா இருப்பாங்களா? சிலருக்கு ஊன்றி கவனிச்சாதான் புரியும். உன்னால அவங்க கவனம் திசை மாறிடலாம்" என்றார்.

"சார், இதெல்லாம் சின்ன விஷயம். இந்த மாதிரி விஷயங்களை ஆசிரியர்கள்தான் அட்ஜஸ்ட் செய்துக்கணும்" என்றான் தீபக்.

"என்ன சொல்றே?" என்று வியப்புடன் கேட்டார் தலைமை ஆசிரியர்.

"மாணவப் பருவம்



ஆசிரியர்!

✪ வாண்டுதாசன் ✪

ணாலே அரட்டையும், கிண்டலுமாகத்தான் இருப்பாங்க. அதை நீங்கதான் பொறுத்துக்கணும். உங்களோட டென்ஷனை எல்லாம் எங்ககிட்டே காட்டக்கூடாது'' என்று தைரியமாகக் கூறினான் தீபக்.

''ஓஹோ! அப்படியா விஷயம். சரி நீ போகலாம்'' என்றார்.

தீபக் வந்துவிட்டான். தனக்குத்தானே பெருமிதப் பட்டுக் கொண்டான்.

ஒரு வாரம் கழிந்தது.



அன்று மீண்டும் தலைமை ஆசிரியர் அழைப்பதாக தகவல் வந்தது. தீபக் சென்றான்.

''தீபக் காலாண்டுத் தேர்வில் நீதான் வகுப்பிலேயே அதிக மதிப்பெண்களைப் பெற்று இருக்கிறாய். இதற்குப் பாராட்டும் வகையில் உன்னிடம் ஒரு பொறுப்பை அளிக்கிறேன். நாளை ஒருநாள் மட்டும் நீ ஆறாம் வகுப்பிற்கு ஆசிரியராக இருக்கலாம். அவர்களுக்குப் பாடம் நடத்தலாம்'' என்று கூறினார்.


தீபக் முகம் மலர்ந்தது. ''நிஜமாகத்தான் சொல்றீங்களா சார்?'' என்று கேட்டான்.

''நாளை ஒருநாள் ஒரு ஆசிரியருக்கான அத்தனை உரிமைகளும் உனக்கும் உண்டு. அதேபோல் ஆசிரியருக்கான அத்தனை கடமைகளையும் நீ செய்ய வேண்டும்'' என்றார் தலைமை ஆசிரியர்.

''கண்டிப்பா செய்வேன் சார். ரொம்ப நன்றி'' என்று கூறிவிட்டு வந்தான்.

வகுப்பில் நண்பர்களிடம் பெருமையுடன் சொன்னான். வீட்டிலும் பெற்றவர்களிடம் சொன்னான்.

அடுத்த நாள் வழக்கத்திற்கு மாறாக சீக்கிரமே



எழுந்து பள்ளிக்குப் புறப்பட்டான்.

"வா தீபக். ஹெட்மாஸ்டர் விஷயத்தைச் சொன்னார். வாழ்த்துகள்" என்றார் வகுப்பாசிரியர்.

பிறகு தலைமை ஆசிரியர் அவனை அழைத்துக் கொண்டு ஆறாம் வகுப்பிற்குச் சென்றார்.

"மாணவர்களே! இன்றைக்கு ஒருநாள் தீபக்தான் உங்கள் ஆசிரியர். தீபக் நடத்தும் பாடத்தைக் கவனிக்க வேண்டும். ஒரு ஆசிரியருக்கான அத்தனை மரியாதையையும் தர வேண்டும். சரியா?"

"சரிங்க சார்" என்று ஒன்றாகச் சொன்னார்கள் மாணவர்கள்.



● தேவை நேர்ந்தால் யானை மணிக்கு 15 மைல் வேகத்தில் ஓடும்.

● ஆப்பிரிக்க யானையில் ஒரு காதின் எடை 50 கிலோ.

● இந்திய யானைகளில் ஆண் யானைக்கு மட்டும் தந்தம் உண்டு. ஆப்பிரிக்க யானைகளில் இரு பாலினத்திற்கும் தந்தம் உண்டு.

அவர் சென்றுவிட தீபக் அனைவரையும் அமரச் சொல்லிவிட்டு வருகைப் பதிவேட்டை எடுத்தான். பிறகு செய்யுளை நடத்த ஆரம்பித்தான்.

எல்லோரும் கைகளில் புத்தகம் வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் மூன்றாவது வரிசையில் ஒரு மாணவனிடம் புத்தகம் இல்லை. அவனைத் திட்டினான் தீபக்.

சற்று நேரம் கழிந்தபோது கடைசி வரிசையில் இருந்த சிலர் குசுகுசுவெனப் பேசினார்கள்.

"சைலன்ஸ்! இப்படி பேசினா பாடத்தை எப்படி நடத்தறது?" என்று கண்டித்தான்.

ஆனாலும் அவர்கள் பேசிக் கொண்டே இருக்க, கோபத்துடன் திட்டி வெளியே நிற்க வைத்தான். பிறகு பாடத்தைத் தொடர்ந்தான். கோபத்தில் இருந்ததால் ஒரு வார்த்தையைத் தவறாக உச்சரித்து விட்டான். மாணவர்கள் சிரித்து விட்டார்கள்.

பக்கத்து அறையிலிருந்து வந்த ஆசிரியர், "தீபக், இங்கே என்ன கூச்சல்? வகுப்பை அமைதியாகப் பார்த்துக்க. உன்னால எனக்கும் டிஸ்டர்ப் ஆகுது" என்று கடிந்து கொண்டார்.

நேரம் செல்லச் செல்ல மாணவர்களின் பேச்சு அதிகமானது. இவனுக்கோ பாடம் நடத்தியதில் தொண்டை வலித்தது. அவர்களிடம் கத்தியும் பேச முடியவில்லை. உணவு இடைவேளை வந்ததும் நேராக தலைமை ஆசிரியரிடம் சென்றான்.

"சார், பசங்க பேசிக்கிட்டே இருக்கறதுல என்னால பாடம் நடத்த முடியலை" என்றான்.

"அதையெல்லாம் என்கிட்டே சொல்லாதே. நீதான் மேனேஜ் செய்யணும். அவங்க ஒரு ரிலாக்ஸ்க்குப் பேசுவாங்க" என்றார்.

தீபக் மனதில் சுரீர் என உறைத்தது. அப்போதுதான் இந்த ஏற்பாடுகள் எதற்கு என்பதே புரிந்தது. தான் முன்பு பேசியது எவ்வளவு தவறானது என்பது தெரிந்தது.

"என்னை மன்னிச்சுடுங்க சார். ஒருநாள் ஆசிரியரா இருந்து மாணவர்களைச் சமாளிக்கவே முடியலை. வருஷம் முழுக்க எங்களை வழி நடத்த ஆசிரியர்கள் எவ்வளவு கஷ்டப்படுவாங்கன்னு புரியுது. அவங்களுக்குத் தொந்தரவு கொடுக்காம அமைதியா இருப்பேன்" என்றான் தீபக்.

"சபாஷ் தீபக்! இனி நீ படிப்புல மட்டுமில்லாம எல்லாவற்றிலும் முதல் மாணவன்தான்" என்ற தலைமை ஆசிரியர் அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

கிட்டப் பார்வையைக் கண்டறிந்தவர்!

என் ஆசிரியர்


என்னுடைய கல்வி வாழ்வில் கணக்கு என்றால் வேப்பங்காயாக இருக்கும். ஏழாம் வகுப்பில் கணிதப் பாடத்தில் ஓவியம் வரைந்ததற்காக அந்தக் கணித ஆசிரியரிடம் செமையாக உதை வாங்கி இருக்கிறேன். எப்படியோ படிப்படியாக முன்னேறி பத்தாம் வகுப்பு வரை வந்து விட்டேன். அங்கு கணக்கு சொல்லித்தரும் ஆசிரியர் தங்கச்சாமி மேல்மட்ட மாணவர்கள் முதல் அடிமட்டத்தில் உள்ள மாணவர்கள் வரை நிதானமாக நடத்தி புரிய வைப்பார். சில நேரம் கரும் பலகையில் சூத்திரத்தை எழுதிப் போட்டு மாணவனிடம் "என்னடா தெரியுது?" என்று கேட்பார். அவன் தெரியாமல் திருதிருவென்று முழிக்கும் நேரம் பார்த்து "கறுப்பு போர்டில் வெள்ளை எழுத்து தெரியுது சார். அப்படித் தானே?" என்றதும் வகுப்பே கலகல ஆகும். அந்த மாணவனுக்கோ தர்ம சங்கடமாகி அடுத்த நாள் சூத்திரத்தை சரியாகப் படித்து விடுவான். அப்படி ஒரு சம்பவத்தில் நானும் மாட்டியதுண்டு. இப்படி படிப்படியாக முன்னேறி கணிதத்தில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தினார். அந்த ஆண்டு எதற்குப் பயந்து நுழைந்தேனோ அந்தப் பாடத்தில் மற்ற பாடங் களைவிட அதிக மதிப்பெண் பெற்றுத் தேறினேன்.

- பா. இசக்கிமுத்து, நெல்லை

ஆறாம் வகுப்பில் புதிதாகச் சென்று உட்கார்ந்தபோது கை கால் உதறல் எடுக்க ஆரம்பித்தது. உள்ளே நுழைந்த ஆசிரியரைப் பார்த்ததும்தான் நிம்மதி வந்தது! அவர் 'திருச்செல்வம்'. ஐந்தாம் வகுப்பின்போது எங்களூர் தொடக்கப் பள்ளியில் 'மாற்றுப் பணியாக' ஒரு வாரம் வந்தபோது அறிமுகமாகி அவரது பாராட்டுதல்களைப் பெற்றிருந்ததால்தான் வந்தது நிம்மதி! பிறகு காலாண்டுத் தேர்வில் தமிழ்ப் பாடத்தில் முதல் மதிப்பெண் எடுத்ததற்கு 'திருக்குறள்' தெளிவுரை பரிசளித்து பாராட்டிய சம்பவம் இன்றும் பசுமையாய் என் நெஞ்சில் நிற்கிறது.

- ப. காளிதாசன், நீர்விளங்குளம்

எனக்குச் சிறு வயதிலிருந்தே கிட்டப் பார்வை உள்ளது. அது பெற்றோருக்கும் கூட தெரியவில்லை. நான், நான்காம் வகுப்பு வரை வந்துவிட்டேன். ஆனால் எழுத்தே



தெரியாது. நான்காம் வகுப்பு ஆசிரியரான வெங்கட்ராமன் என் குறையைக் கண்டறிந்து தனிப்பட்ட கவனம் செலுத்தி எனக்குப் பாடம் கற்பித்தார். அந்த ஆசிரியரின் முயற்சியால் அதே ஆண்டில் முதல் மாணவன் வரிசையில் இடம் பெற்றேன். அவர் மட்டும் அன்று என் மீது அக்கறை காட்டிராவிட்டால் இன்று என் நிலைமை நினைக்கவே பயமாக உள்ளது. எழுத்தறிவித்தவன் இறைவன் என் பார்கள். அந்த ஆசிரியரை நான் இறைவனுக்கும் மேலாக கருதி தினமும் வணங்குகிறேன்.

- இரா. இராமகிருஷ்ணன், மயிலாடுதுறை

சிலை எங்கே?

பிரபலங்களின் வாழ்வில்...

ஏன் செய்யக் கூடாது?

'பைரஸ்' என்ற கிரேக்க மன்னன் ஒருசமயம் இத்தாலியின் மீது படையெடுக்க ஆயத்தமானான்.

அப்போது 'சினியாஸ்' என்ற ஞானி அங்கே வந்தார். மன்னனின் பிரயாணத்தைப் பற்றி விசாரித்தார்.

"ரோமாபுரியை ஜெயிப்பதுதான் என் முதல் வேலை!" என்றான் மன்னன்.

"அதன் பிறகு?" என்றார் ஞானி.

"அடுத்தது இத்தாலி முழுவதும்!" என்றான் மன்னன்.

"அப்புறம்?" என்று தொடர்ந்து கேட்டார் ஞானி.

"இத்தாலியை வென்றதும் கார்த்தேஜ், மாஸிடோனியா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் மீது படையெடுப்பேன்!"

"சரி... சரி... எல்லா நாடுகளையும் ஜெயித்த பிறகு என்ன செய்யப் போகிறாய்?"

"மீதியுள்ள நாட்களை அமைதியாகவும் இன்பமாகவும் கழிப்பேன்.

"அரசே, கடைசியில் செய்யப் போகும் அந்தக் காரியத்தை இப்போதே ஏன் செய்யக் கூடாது?" என்றார் ஞானி சினியாஸ். மன்னனால் இதற்குப் பதில் தர முடியவில்லை.

- கோபி.
ஜி.கே.எஸ். மூர்த்தி

புத்தகம் பரிசு

பாலகங்காதர திலகரின் தந்தை ராமசந்திர திலகர் ஒருநாள், வடமொழியில் சிறந்த காவியமான காதம்பரியைப் படித்துக் கொண்டிருந்தார். அது மிகவும் கடுமையான நடையை உடையது. சற்றுத் தொலைவில் விளையாடிக் கொண்டிருந்த திலகர் ஓடி வந்தார். அதைத் தமக்குத் தருமாறு தந்தையிடம் கேட்டார். "இது கடினமான புத்தகம்" என்றார் தந்தை.

"அதனால் என்ன? நான் படித்து விடுவேன்" என்று கங்காதரர் உறுதியான குரலில் கூறினார்.

தந்தை, "கங்காதரா! நான் ஒரு கணக்குப் போடுகிறேன். அதை நீ சரியாகப் போட்டு விட்டால் இப்புத்தகத்தைப் பரிசாகத் தருகிறேன்" என்றார்.

கடினமான அக்கணக்கை பலமுறை போட்டு சரியான விடையைக் கண்டுபிடித்து தந்தையிடம் காட்டினார்.

தந்தை எல்லையில்லா வியப்படைந்தார்.

பின் காதம்பரி நூலை மகனுக்குப் பரிசாகக் கொடுத்தார்.

- சு. கண்ணகி,
மிட்டூர்



• திலகர்

தம்பி கனமா?

ஒருமுறை காந்திஜி ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அந்தக் கூட்டத்துக்குப் பண்ணி

ரண்டு வயதுச் சிறுமி ஒருத்தியும் காந்திஜியின் பேச்சைக் கேட்க வந்திருந்தாள். அவளுக்கு உட்கார இடம் கிடைக்காததால் தன் மூன்று வயது நிரம்பிய தம்பியை இடுப்பில் தூக்கியபடி நின்று கொண்டு காந்தியின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மேடையில் இருந்த காந்திஜி அந்தச் சிறுமியிடம், "ஏம்மா! இந்தக் கனத்தைத் தூக்கிக் கொண்டு பொறுமையாக உன்னால் எப்படி நிற்க முடிகிறது?" என்று கேட்டார். அதற்கு அந்தச் சிறுமி, "கனமா! இது என் தம்பி அல்லவா! எப்படி அவன் கனமாகத் தெரிவான்?" என்றாள். அதைக் கேட்ட காந்திஜி வியப்படைந்தார். நமக்காக, நமக்கு வேண்டியவர்களுக்காக எது செய்தாலும் அது துன்பமாகத் தெரிவதில்லைதானே!

- கே. என். மகாலிங்கம், பாண்டிச்சேரி



* அலெக்ஸாண்டர்



* காந்தி



* நெப்போலியன்

விடா முயற்சி...

ஓர் இராணுவ வீரனை நெப்போலியன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார் ஓர் உயர் அதிகாரி. "இவன் பெரிய திறமைசாலியான வீரன் அல்ல; போரிலிருந்து இவனுக்கு ஓய்வு தர வேண்டும்" – இது அதிகாரியின் குற்றச்சாட்டு.

"இவன் என்ன செய்தான்?" என்று நெப்போலியன் கேட்டார்.

"எதிரிகளின் தாக்குதலில் ஒன்பது முறை தரையில் விழுந்தான். பத்தாவது முறைதான் எழுந்தான்." உடனே நெப்போலியன் முகம் பிரகாசமாகி, "உன் விடா முயற்சியையும், வீரத்தையும் நான் பாராட்டுகிறேன். ஒன்பது முறை வீழ்ந்தாலும் சோர்ந்துவிடாமல் பத்தாவது முறை எழுந்து நின்று வெற்றி பெற்றாயே... நீதான் மற்றவர்களைவிட மாவீரன்" என வாழ்த்தினார்.

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்

ஏன் இல்லை?

அயல்நாட்டு விருந்தினரொருவர், மாவீரன் அலெக்சாண்டரிடம், "பேரரசே! உங்கள் நகரிலுள்ள தோட்டம் அழகாகவும், அமைதியாகவும் உள்ளது. மேலும், போரில் ஈடுபட்ட பல வீரர்களின் சிலைகளையும் வைத்திருக்கிறீர்கள். ஆனால் தங்களின் உருவச்சிலையைக் காணவில்லையே, ஏன்?" என்று கேட்டார்.

அதற்கு அலெக்சாண்டர், "என் உருவச்சிலையை நானே இங்கு வைத்தால், எதிர்காலத்தில் 'இது யாருடைய சிலை?' என்று என் சிலையைப் பார்த்து மக்கள் கேட்பார்கள். ஆனால் அதைவிட, 'இவ்வளவு சிலைகள் இருக்கும்போது, அலெக்சாண்டரின் உருவச் சிலை மட்டும் ஏன் இல்லை?' என்று மக்கள் கேட்கட்டும். அதைத்தான் நான் விரும்புகிறேன்" என்றார்!

- எம். வினோத், சங்கரன்கோயில்




பானுதாசர்

பைடனிபுரத்தில் பிறந்தவர் பானு. ஆதித்ய இருதயம் படித்துப் பிறந்ததால் தந்தை இப் பெயரைச் சூட்டினார். தந்தை பெருங்கோபக்காரர். ஏழு வயதில் பானுவுக்கு உப நயனம் செய்வித்தார். வேதத்தைத் திக்கித் திணறிச் சொல் லும் பானு தந்தையிடம் தினமும் அடி வாங்குவார்.

ஒருநாள் செமையான உதை. பானு காட்டிற்கு ஓடி விட் டார். காட்டிலே ஒரு சூரியனார் கோயில். அங்கே போய் "சூரிய பகவானே! நீ ஆஞ்சனேயருக்கும், ரிஷிகளுக்கும் வேதம் சொல்லிக் கொடுத்தாயாமே! உன் பேரை வைச்சுண்ட எனக்கு ஏன் மந்திரங்கள் சொல்ல வரலே! கருணை காட்ட மாட்டாயா?" என்று உருக்கமாக வேண்டி அழுதார். அப்படியே பசியால் சுருண்டு தூங்கி விட்டார்.

"குழந்தாய்! எழுந்திரு". பானு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார். அவர்முன் ஒளிமயமான ஒரு வேதியர் நின்று கொண்டிருந்தார். "இந் தப் பாலைக்குடி" ஒரு பொற்கிண்ணத்தில் பாலைக் கொடுத் தார். பானுவுக்குப் பசியாயிருந்த தால் பாலை மடமட வெனக் குடித்தார்.




"ஓம், நமோ நாராய ணாய" என்று வலது காதில் ஓதி "இதைச் சொல் லிக் கொண்டிரு" என்று கூறி மறைந்தார். ஏழு நாட்கள் இப்படி நடந்தது.

"நீங்க ஏன் ஒருத் தரை ஒருத்தர் குற்றம் சொல்லி சண்டை போட் டுக்கறீங்க? ஒரே பிள்ளை. பிரமாதமா வரணுமின்னு தகப்பனார் நினைக்கிறது தப்பா? எவ்வளவு தூரம் கண்டிக்கலாமுன்னு அளவா இருக்கு? விடுங்க. நான் தர்ப்பை அறுக்க காட்டுக்குப் போனேன்! அங்கே சூரியனார் கோயி லிலே பானுவைப் பார்த் தேன். போய் கூட்டிட்டு வாங்கோ" என்று ஒரு பெரியவர் சொன்ன தகவல் கேட்டு எட்டாம் நாள் தேடி வந்த பெற்றோருடன் வீட்டுக்குத் திரும்பி னார்.

நடந்ததைக் கேட்ட பெற்றோர் அதிசயித்து மகனை வாரிய ணைத்துக் கொண் டனர். பானு வாலிபனா னதும் நல்ல

குடும்பத்துப் பெண்ணொருத்தியைத் திருமணம் செய்வித்தனர்.

''பெருமாளை பூஜித்துக் கொண்டிருந்தால் உங்களுக்குப் பசி தெரியாமலிருக்கலாம். குழந்தைகளுக்குப் பசிக்குமல்லவா? பூர்வீக சொத்து கரைந்துவிட்டது. நாங்கள் ஆளுக்குக் கொஞ்சமாக எழுநூற்று ஐம்பது ரூபாய் பெறுமான ஜவுளிகள் கொடுத்து எங்கள் கடைகளுக்கிடையில் ஒரு ஜவுளிக் கடை வைத்துத் தருகிறோம்'' என்றனர் சுற்றத்தார்.



சம்மதித்தார் பானு. அப்போது பவுன் ஏழு ரூபாய் விற்ற காலம்!

'எல்லாம் அவன் அருள்' என்று தொழிலை நடத்தினார் பானுதாசர். 'இந்தத் துணி இன்ன விலை. கடை வாடகை, லாபம் இவ்வளவு' என்று உண்மையைச் சொல்லி வியாபாரம் செய்தார். உறவினர்கள் தலையிலடித்துக் கொண்டனர்.

''ஏற்றிச் சொல்லு. அவர்கள் இறக்கிக் கேட்பார்கள். அதுதான் வாடிக்கையாளர்களுக்குத் திருப்தி'' என்றனர். பானு சம்மதிக்கவில்லை. ஆனால் மற்ற கடைகளை விட விலை குறைவாக இருந்ததால் பானுதாசரின் கடையில் கூட்டம் அலை மோதியது. ஒரு மாதத்தில் கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டார். சரக்குகள் புதியதாக இருந்தன.

சுற்றத்தார், ''பாவம், கஷ்டப்படுகிறானே என்று இரக்கம் பார்த்தது தப்பு. நாம் ஈயோட்டிக் கொண்டிருக்கிறோம்.

"நம்மைவிட எத்தனை குறைவாக விற்றுத் தொலைக்கிறான்" எனப் பொருமினர்.

பெரிய ஊர்களில் குதிரைகளில் போய் கூட்டாக ஜவுளி எடுப்பது அவர்கள் வழக்கம். ஒருநாள் அப்படி திரும்பும் போது இருட்டிவிட்டது. கோயில் வெளி மண்டபத்தில் தங்கினார்கள். ஹரிதாசர் என்பவர் கோயிலுக்குள் பாகவத உபன்னியாசம் செய்து கொண்டிருந்தார்.

"என் சரக்குகளைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள். நான் கொஞ்ச நேரம் கதா காலட்சேபம் கேட்டுவிட்டு வருகிறேன்" என்று நயமாகச் சொன்னார் பானுதாசர்.



யானை நின்று கொண்டே தூங்கும். யானை தொடர்ந்து ஒரே இடத்தில் எட்டு மணி நேரம் வரை கூட நிற்கும்.

"நீ வைத்த வேலைக்காரனா நாங்கள்? நீ புண்ணியம் தேட நாங்கள் கண் முழிக்கவா, முடியாது போ" என்றனர்.

"அவன் தந்தது இந்தச் செல்வம். என்னுடையதானால் இருக்கும். பாகவத ஞானமே அழியாத சொத்து" என்றபடி கதை கேட்கப் போய்விட்டார்.

"என்ன கொழுப்பு! இவனுக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்! வந்து கேட்டால் களவு போய்விட்டது என்று சொல்வோம். நமக்கும் பிரச்னை தீரும். அவனோடு ஊருக்குத் திரும்பாமல் வேறு ஒரு சந்தைக்குப் போவதாகச் சொல்லிப் பணத்தையும், ஜவுளியையும் பங்கிட்டுக் கொள்வோம்" என்று கூடிப் பேசி முடிவெடுத்தனர்.

குதிரை மேலிருந்த சரக்கையும், பணப் பையையும் எடுத்துக் கொண்டு, குதிரையையும் விரட்டி விட்டனர். சிறிது நேரத்தில் பானுதாசர் திரும்பி வந்து ஏமாறப் போவதைப் பேசிக் குதூகலித்தனர். பிறகு உறக்கம் அவர்களை ஆட்கொண்டது. நள்ளிரவு. பொய்யை மெய்யாக்கி விட்டார் பெருமாள். தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் சூழ்ந்து கொண்டனர். துணிகள், பணம், குதிரைகள் எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டு சிட்டாய் பறந்தனர்.

"பானுவின் பொருளை நாம் கவர்ந்தோம். நம் பொருள் தொலைந்து விட்டது" என வருந்தினர்.

பானுதாசர் பிரசங்கம் முடிந்து வந்து கொண்டிருந்தார். வழியிலே பெருமாள் மனிதனாய் வந்து, "பானுதாசரே! குதிரையைச் சரியாகக் கட்ட மாட்டீரோ? நல்லவேளை, என் கண்ணில் பட்டது. கடிவாளத்தைப் பிடியும்" என்று குதிரையை ஒப்படைத்துச் சென்றார்.

பானுதாசர் திகைத்தார். "வழிப் போக்கனான என் பெயரை இவர் எப்படி அறிவார்? இது என் குதிரை என்று எப்படி தெரியும்?" என்று குழம்பியபடி மண்டபத்துக்குச் சென்றால் அங்கே சுற்றத்தார் புலம்பிக் கொண்டிருந்தனர்.

"பானு! நீ பாகவதம் கேட்கப் போனதால் உதைபடாமல் பிழைத்தாய்!" எனப் பாராட்டினர்.

"கவலையை விடுங்கள். இதெல்லாம் நீங்கள் ஜவுளிக்கடை வைத்துக் கொடுக்காதிருந்தால் கிடைத்திருக்குமா? உங்கள் எண்ணப்படி சமமாகப் பிரித்துக் கொள்ளுங்கள்" என்று குதிரையையும் ஒப்படைத்து விட்டு சலனமில்லாமல் ஊருக்குத் திரும்பினார் பானுதாசர்.


அதன்பின் நண்பர்கள் கொடுத்தால் சாப்பாடு. ஊரிலே திருவிழா, கல்யாணமென்றால் விருந்து. உஞ்சவிருத்தியில் கிடைப்பதை குழந்தைகளுக்கு வயிறாரக் கொடுத்து மீதியைத் தம்பதிகள் சாப்பிட்டனர்.

புதிர் உலகம்

எத்தனை விமானங்கள்?

I அந்தச் சாலையில் 100 அடிக்கு ஒரு விளக்குக் கம்பம் வீதம் 10 கம்பங்களும், அந்தச் சாலையின் முடிவில் இருந்த வட்ட வடிவ மைதானத்தைச் சுற்றி நூறு அடி இடைவெளியில் ஒன்றாக 10 விளக்குக் கம்பங்களும் இருந்தன. சாலையின் நீளம் எவ்வளவு? மைதானத்தின் சுற்றளவு எவ்வளவு?

- என். ஜரீனா பானு,
திருப்பட்டினம்



II ஒரு பெண்மணி ரூ.1000 எடுத்துக் கொண்டு நகரத்தில் உள்ள ஒரு ஜவுளிக் கடைக்குச் சென்றார். ரூ. 100 மதிப்புள்ள புடைவைகளும் ரூ. 30 மதிப்புள்ள ரவிக்கைத் துண்டுகளும் ரூ. 5 மதிப்புள்ள கைக்குட்டைகளும் எடுத்து கொண்டார். அவை அனைத்தையும் எண்ணிப் பார்க்க 100 உருப்படிகள் இருந்தன. அப்படி எனில் அவர் எடுத்த புடைவைகள் எத்தனை? ரவிக்கைத் துண்டுகள் எத்தனை? கைக்குட்டைகள் எத்தனை?

- சு. கண்ணகி,
மிட்டூர்

III ஒரு சிறு கூண்டு. அதன் ஒவ்வொரு முனையிலும் ஒரு பூனை உட்கார்ந்திருக்கிறது. ஒவ்வொரு பூனைக்கு எதிராகவும் மூன்று பூனைகள் உள்ளன. அதாவது ஒவ்வொரு பூனையின் பின்னாலும் முன்னாலும் இன்னொரு பூனை அமர்ந்திருக்கிறது. அப்படியென்றால் மொத்தம் எத்தனை பூனைகள் அந்தக் கூண்டில் உண்டு?

- கோ. பாலசுப்பிரமணி,
நல்லூர்

IV கீழ்கண்ட 6 கேள்விகளுக்கும் பதில்கள் 'ல்' என்ற எழுத்தில் முடிவடையும். எங்கே விடைகளைக் காணுங்கள் பார்க்கலாம்!

1. அமீபா ஒரு ______ உயிரி
2. மீன்களின் உடல் மேல் இருப்பது ______
3. உலகிலேயே வேகமாக வளரும் தாவரம் ______
4. காச நோய் எந்த உறுப்பைப் பாதிக்கும்?
5. பூட்டுக்குப் பெயர் பெற்ற இடம் எது?
6. தமிழ்நாட்டில் பறவைகள் சரணாலயம் எங்குள்ளது?
7. பாரம்பரிய இயலின் தந்தை எனப்படுபவர் யார்?

- சிவ. மணவழகி,
திருவாரூர்

V 200 அடி நீளமுள்ள ஒரு மின்சார ரயில்



மணிக்கு 50 மைல் வேகத்தில் போய்க் கொண்டிருக்கையில் அதன் புகை நிமிடத்துக்கு 100 அடி எதிர் நோக்கிச் சென்றால் ரயில் 200 மைல் சென்றதும் புகையின் நீளம் எவ்வளவு இருக்கும்?

- ச. அழகுவேல்,
கன்னிவாடி

VI ஒரு பக்தர் சில தாமரைப் பூக்களைப் பறித்துக் கொண்டு ஆலயத்திற்குச் சென்றார். பறித்து வந்த பூக்களில் மூன்றில் ஒரு பங்கை பிள்ளையாருக்கும், ஐந்தில் ஒரு பங்கை சிவபெருமானுக்கும் ஆறில் ஒரு பங்கை அம்பாளுக்கும் சமர்ப்பித்தார், கால் பகுதியை நவக்கிரகங்களுக்குச் சூட்டினார். அவ்வளவு போக, அவரிடம் ஆறு பூக்கள் மீதமிருந்தன. அப்படியானால் அவர் பறித்து வந்த மொத்தப் பூக்கள் எத்தனை?

VII தங்கள் நாட்டு விமானப் படைக்கு விமானம் வாங்குவதற்காக இரண்டு அதிகாரிகள் வெவ்வேறு நாட்டிற்குத் தனித் தனியே சென்றனர். வேலை முடிந்து இருவரும் திரும்பும் போது இரு அதிகாரிகளும் விமானப் பயணத்தில் சந்தித்துக் கொண்டனர். முதல் அதிகாரி இரண்டாமவரைப் பார்த்து "நீங்கள் வாங்கிய விமானங்களில் இரண்டை என்னிடம் தந்து விடுங்கள். நாம் இருவரும் அரசிடம் ஒரே எண்ணிக்கையில் விமானம் வாங்கியதாகத் தெரிவித்து விடலாம்" என்று கூறினார். அதற்கு இரண்டாமவர் "உங்களிடம் உள்ள விமானங்களில் இரண்டை என்னிடம் கொடுங்கள். உங்களைப் போல் இரண்டு மடங்கு விமானங்கள் வாங்கியதாக அரசின் பாராட்டு எனக்குக் கிடைக்கும்" என்றார். அப்படியானால் இருவரும் வாங்கிய விமானங்கள் தனித் தனியே எத்தனை?

- அ. ராஜா ரஹ்மான்,
கம்பம்

விடைகள்:

I. சாலையின் நீளம் 900 அடி, மைதானத்தின் சுற்றளவு 1000 அடி

II. புடைவை : 5
ரவிக்கைத் துண்டு: 1
கைக்குட்டைகள் : 94
100

III. ஒரு பூனைக்கு எதிராக மூன்று பூனைகள் என்றால் அந்த இடம் சதுரமான இடம். மொத்தம் நான்கு பூனைகள் உள்ளன.


IV. 1. செல்
2. செதில்
3. மூங்கில்
4. நுரையீரல்
5. திண்டுக்கல்
6. வேடந்தாங்கல்
7. கிரிகோர் மெண்டல்

V. மின்சார ரயில் புகை விடாது.

VI. பக்தர் பறித்த மொத்த மலர்கள் 120

VII. முதல் அதிகாரி 10 விமானங்கள், இரண்டாம் அதிகாரி 14 விமானங்கள்.





100 வயது பள்ளி !



* தாளாளர்

நூற்றாண்டு விழாக் காணும் சௌராஷ்ட்ரா மேல்நிலைப் பள்ளி பழைமையும் புகழும் வாய்ந்த பள்ளியாகத் திகழ்கிறது.

1956 - ஆம் ஆண்டு முதல் தமிழக மெங்கும் மதிய உணவுத் திட்டம் தொடங்க சௌராஷ்ட்ரா மேல்நிலைப் பள்ளியே காரணமாய் இருந்தது. இப்பள்ளியில் 90 ஆண்டுகளுக்கு முன்பே இலவச மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவதை, பள்ளிப் பொன்விழாக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்ட வந்த, அந்நாள் முதல்வர் காமராசர் பார்வையிட்டார். 'தமிழகப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க மதிய உணவுத்திட்டமே சிறந்த வழி' என அவர் உடனே கண்டறிந்தார். அதைத் தமிழக மெங்கும் செயல்படுத்தினார்.

புறநகர்ப் பகுதியிலிருந்து வரும் மாண வர்கள் பலர் ஏழ்மையினாலும், வெகு சீக் கிரம் புறப்படுவதாலும் காலையில் எதுவும் உண்ணாமல் வருவதை அறிந்த பள்ளி நிர்வாகத்தினர் நன்கொடையாளர் உதவி யுடன் இரண்டு ஆண்டுகளாக இலவச காலைச் சிற்றுண்டித் திட்டத்தையும் தொடங்கியுள்ளனர்.


இயற்பியல், வேதியியல், தாவரவியல் என ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி ஆய்வகங்களும், சிறந்த நூலகமும் உண்டு.

கல்வி நிறுவனங்களில் அரிதாகக் காணப் படும் விலங்கியல் அருங்காட்சியகமும், நவீன உடற்பயிற்சிக் கூடமும் உள்ளன.

தாளாளர் ஏ.கே. மூர்த்தி தமது நிர்வாகத் தின் கீழுள்ள ஐந்து பள்ளிகள் நற்பெயர் பெறவும், மாணவர்கள் கல்வியில் மிகுந்த முன்னேற்றம் பெறவும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் நல்ல பலனளித்து வருகின் றன.

பள்ளி மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் முதன்மை பெற்றுப் பரிசுகள் பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு தேர்விலும் எல்லாப் பாடங் களிலும் 60% மதிப்பெண் பெறும் ஒவ் வொரு மாணவருக்கும், 100% தேர்ச்சி காட் டிய ஆசிரியர்களுக்கும் ஊக்கப் பரிசுகள் வழங் கப்படுகின்றன. - **விஜயா கண்ணன்**



காட்சி ஒன்று; பார்வை நான்கு!

உச்சி வெயிலில் மரத்தடியில் ஒருவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்.

விறகு வெட்டி: இவர் கடுமையாக உழைத்திருப்பார்; அதனால் பகலில் அயர்ந்து தூங்குகிறார்.

திருடன்: இவன் இரவுத் திருடனாக இருப்பான்; அதனால்தான் பகலில் நன்கு தூங்குகிறான்.

குடிகாரன்: இவன் காலையிலேயே குடித்துவிட்டு மயங்கிக் கிடக்கிறான்.

துறவி:இவர் முற்றும் துறந்த துறவியாக இருப்பார்!

- டி.எஸ். ராகேஷ்,
பத்தாம் வகுப்பு.

தந்திரக் கணக்கு

1) 1 லிட்டர் பாத்திரமும் ½ லிட்டர் பாத்திரமுமாக இரண்டு பாத்திரங்கள் உள்ளன. ஒரு லிட்டர் பாலில் இந்த இரு பாத்திரங்களையும் நிரப்ப வேண்டும். எப்படி?

- ஏ.ஜே. பிரசாந்த், பத்தாம் வகுப்பு.

1 லிட்டர் பாத்திரத்திற்குள் ½ லிட்டர் பாத்திரத்தை வைத்துப் பாலை ஊற்றினால் இரண்டு பாத்திரங்களும் நிரம்பி விடும்.

நிலைப

பூ தோன்றிய நிலை - அரும்பு
மலரத் தொடங்கிய நிலை - போது
மலர்ந்த நிலை - மலர்
உதிர்ந்து விழுந்த நிலை - வீ
வாடிச் சிவந்த நிலை - செம்மல்

- எஸ்.எம்.விக்னேஷ்,
பன்னிரண்டாம் வகுப்பு

தானம் செய்...

எழுதும் முன் சிந்தி
செலவு செய்யும் முன் தேடு
பேசும் முன் கவனி
முதலீடு செய்யும் முன் ஆய்வு செய்
குறை சொல்லும் முன் காலம் தாழ்த்து
ஓய்வு பெறும் முன் சேமி
இறக்கும் முன் தானம் செய்.

- எல்.ஏ. பாலாஜி,
ஏழாம் வகுப்பு.



இயற்கை நியதி!

புகழுக்காகப் பூக்கள் மணப்பதில்லை!
கை தட்டலுக்காகக் கருமேகம்
பொழிவதில்லை!
பட்டங்களுக்காகப் பாலும்
சுவைப்பதில்லை!
இவையனைத்தும் இயற்கை நியதி!

- வை. மதன்குமார், பதினோராம் வகுப்பு

ஒத்த எண்களின் விந்தை

111 = (1+1+1) = 37 (1+1+1)3 x 37 = 111
222 = (2+2+2) = 37x 6
333 = (3+3+3) = 37
444 = (4+4+4) = 37
555 = (5+5+5) = 37
666 = (6+6+6) = 37
777 = (7+7+7) = 37
888 = (8+8+8) = 37
999 = (9+9+9) = 37

அடைப்புக் குறிக்குள் உள்ள எண்களைக் கூட்டி 37 ஆல் பெருக்கினால் எதிரே உள்ள பெருக்கற் பலன் கிடைக்கும்.

- கே. கே. சதீஷ், ஆறாம் வகுப்பு

மதுரை
சௌராஷ்டிரா
மேல்நிலைப் பள்ளி
சமர்ப்பணம்

நமது மந்திரிகள்!



மூளை - பிரதம மந்திரி
தண்டு வடம் - இணை அமைச்சர்
நரம்பு மண்டலம் - செய்தித் துறை அமைச்சர்
தலை - கல்வி அமைச்சர்
தோல் - மனித வள மேம்பாட்டு அமைச்சர்
எலும்பு - பாதுகாப்பு அமைச்சர்
கண் - வெளியுறவுத் துறை அமைச்சர்
காது - தபால் தந்தி அமைச்சர்
மூக்கு - சுகாதாரத் துறை அமைச்சர்
பல் - குடிமைப் பொருள் துறை அமைச்சர்
இதயம் - உள் விவகாரத் துறை அமைச்சர்
கை - தொழில் துறை அமைச்சர்
வயிறு - உணவுத் துறை அமைச்சர்
கால் - போக்குவரத்துத் துறை அமைச்சர்.

- ஏ. சுரேஷ், ஆறாம் வகுப்பு

பெருங் கடல்களில் செல்லும் கப்பல்கள் ஏரியில் செல்ல நேர்ந்தால் அவை நீருக்குள் அதிக அளவு மூழ்கின்றன. காரணம் கடல் நீரில் அதிக அளவு உப்புக் கலந்திருப்பதால் அதன் அடர்த்தி அதிகம். ஆனால் ஏரி நீரில் உப்புக் கலவை இல்லை. அடர்த்தியும் குறைவு.

- எஸ். சண்முகசுந்தரம், எட்டாம் வகுப்பு.

சம்பளம் உயராதது ஏன்?

குப்புசாமி தன் முதலாளியிடம் "நான் ஐந்து வருடங்களாக உங்களுக்காக மரம் வெட்டிக் கொண்டிருக்கிறேன். என் சம்பளத்தை உயர்த்தவில்லை. போன வருடமே வந்த அப்புசாமிக்கு மட்டும் சம்பளத்தை உயர்த்தி விட்டீர்கள். நியாயமா?" என்றான். முதலாளி சிரித்துக் கொண்டே சொன்னார்: "அவன் உன்னைவிட அதிக விறகுகளை வெட்டுகிறான். அதனால்தான் சம்பளத்தை உயர்த்தினேன்." அடுத்தநாள் முதல் குப்புசாமி கடுமையாக முயன்றான்; முடியவில்லை. அப்புசாமியிடம், "நான் கடுமையாக உழைக்கிறேன். ஆனாலும் அதிக விறகுகளை வெட்ட முடியவில்லையே? நீ மட்டும் எப்படி வெட்டுகிறாய்?" என்றான.

அப்புசாமி சிரித்துவிட்டு, "ஒவ்வொரு நாளும் என் கோடாலியை நான் கூர்மைப் படுத்துகிறேன். நீ உன் கோடாலியை எப போது கூராக்கினாய்?" என்றான். குப்புசாமிக்குப் பொறி தட்டியது.

- என்.எஸ். கார்த்திக், பத்தாம் வகுப்பு.



மதுரை சௌராஷ்ட்ரா மேல்நிலைப் பள்ளி ஸ்பெஷல்



என்.சி. சிவகுமார், பத்தாம் வகுப்பு



ஹெச். ஹர்வோன் ரஜீத், பன்னிரெண்டாம் வகுப்பு



கே.ஜி. நாகராஜன், எட்டாம் வகுப்பு



கே.ஜி. நாகராஜன், பதினோராம் வகுப்பு



எஸ்.சி. விக்னேஷ், பத்தாம் வகுப்பு



ஹெச். ஹரோக் ரஜீத், பன்னிரெண்டாம் வகுப்பு



டி.எஸ். ராகேஷ், பத்தாம் வகுப்பு



வாகை சூட வயது தடையில்லை

வெற்றி வீரன் வெங்கடேஸ்வரன்!

மகாராஷ்ட்ரா மாநிலம் நாஸிக் நகரம். தேசிய இளநிலை நீச்சல் போட்டியின் இறுதிச் சுற்று துவங்க இன்னமும் சில நிமிடங்களே இருக்கின் றன. அது ஐம்பது மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் நீச்சல் போட்டி. துவங்கும் முனையில் நின்று கொண்டிருந்தான் ஒன்பது வயது வெங்கடேஸ்வரன். குளத்தின் பக்கவாட்டில் நின்று கொண்டிருந்த பயிற்சியாளர் முனியாண்டியைப் பார்த்து சிக்னல் செய்யவே அவர் அருகே வந்தார். ''ஸார்.. இதே போட்டியிலே கலந்துக்கிறவங்க என்னை விட அதிக வயசு இருப்பாங்க போலிருக்கே'' என்று சந்தேகத்தை பயத்துடன் வெளிப்படுத்தினான். ''ஆமாம்... உன்னோட வயசு அல்லது இரண்டு வயது கூட அதிகம் இருக்கலாம். ஆனா நீ பயப்படாதே. தைரியமாக குளத்தில் குதி. வெற்றி ஒன்றே லட்சியமாக இருக்க வேண்டும்'' என்று தைரியம் சொல்லி முதுகை தட்டிக் கொடுத்தார் முனியாண்டி. போட்டி துவங்கியது. அனைவரையும்ஆச்சர்யத்தில் மூழ்க வைக்கும் அளவுக்கு 50 மீட்டர் தூரத்தை 31.56 விநாடிகளில் கடந்து முதல் பரிசான தங்கத்தை வென்று தேசிய இளநிலை சாம்பியன் ஆனான். தங்கம் மட்டுமல்ல, நாஸிக்கில் நடந்த 100 மீட்டர் போட்டி உட்பட மற்ற போட்டிகளிலும் கலந்து கொண்டு இரண்டு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் பெற்ற வெற்றி வீரனாக தமிழகத்திற்கு வந்தான். 'ஆஹா... இதோ ஒரு





நம்பிக்கை நட்சத்திரம்' என்று நீச்சல் விளையாட்டு ஆர்வலர்கள் மனம் விட்டுப் பாராட்டினார்கள்.

நாசிக்கில் வாங்கியது முதல் தங்கம் அல்ல. வெங்கடேஸ்வரனைப் பொறுத்த மட்டில் அது 39வது தங்கம். அவன் வீட்டு கண்ணாடி அலமாரியில் மாநில அளவில் பல போட்டிகளில் வாங்கிய தங்கப் பதக்கங்களும், வெள்ளி, வெண்கலப் பதக் கங்களும் அழகாக அடுக்கி வைக்கப்பட் டிருக்கின்றன. வெங்கடேஸ்வரன் நீச்சல் கற்றுக் கொள்ளத் துவங்கியபோது அவனுக்கு வயது நான்கு. அப்பா நரேஷ் முத்துகிருஷ்ணன் மின் சாதனங்கள் விற்பனை வர்த்தகர். அம்மா நிர்மலாதேவி ஆசிரியை. வெங்கடேஸ்வரனின் நான்காவது பிறந்தநாள் அன்று நீச்சல் பயிற்சியாளர் முனியாண்டியையும் அழைத்திருந்தார்கள். பிறந்தநாள் கொண்டாட்டங்களின்போது, வெங்கடேஸ்வரனின் சுட்டித்தனத்தை முனியாண்டி மிகவும் ரசித்தார். பார்த்துக் கொண்டிருந்தபோதே எட்டடி உயரத் திலிருந்து குதித்தான். "இவனை நீச்சல் பயிற்சியில் சேர்த்து விடுங்கள். பெரிய சாம்பியனாக்கிக் காட்டுகிறேன்" என்று அவனது பெற்றோரிடம் சொன்னார். பெற்றோருக்கும் ஒரு நம்பிக்கை உண் டாகவே முனியாண்டியிடம் வெங்கடேஸ் வரனை ஒப்படைத்து விட்டனர்.

"நம்மை விட சிறிய நாடுகள்கூட ஒலிம்பிக்ஸ் போட்டிக்கு நிறைய வீரர், வீராங் கனைகளை அனுப்புகிறார்கள். நமது நாட்டி லிருந்து ஏதென்ஸ் ஒலிம்பிக் நீச்சல் போட்டிக்கு ஒரே ஒரு வீரர்தான் போகிறார். 110 கோடி கொண்ட நமது நாட்டுக்கு இது அவமானம் இல்லையா?" என்று ஆவேசப் படுகிறார் முனியாண்டி. நீச்சல் குளத்தின் கரைகளில் எட்டு, பத்து மணி நேரம் நின்று கொண்டு சிறுவர், சிறுமியருக்கு இலவசமாக நீச்சல் சொல்லித் தருகிறார். இன்னமும் பத்து வருடங்களில் உலக அளவில் பளிச்சிட வைக்கும் நீச்சல் வீரர்களை உருவாக்குவதுதான் இவர் லட்சியம். பயிற்சி பெறும் சிறுவர்களை நேரடியாக குளத்தில் இறங்க முனியாண்டி அனுமதிப்பதில்லை. சுமார் ஒரு மணி நேரம் கடுமையான உடற்பயிற்சிகள் செய்ய வைக்கிறார். "கார ணம் உடல் எடை அதிகரிக்கக் கூடாது. நீச்சலடித்தப் பின் வேர்க்கக் கூடாது. முதலிலேயே வேர்த்து போகும் அளவுக்கு, உடற்பயிற்சிகள் செய்துவிட்டு தண்ணீரில் குதித்தால் நீச்சலுக்குத் தேவையான சக்தி தானாக வரும். உடலுக்கும் எந்தப் பாதிப்பும் வராது" என்கிறார் முனியாண்டி.

வெங்கடேஸ்வரன் மாநில அளவில் முதல் இடம் பெறுவான் என்று நினைக்கும் வேளையில் தேசிய அளவில் சாம்பியனாக வந்தது அனைவரையும் வியப்பில் ஆழ்த் தியது. "முதலில் தேசியப் போட்டிகள், ஆசியப் போட்டி, அடுத்து காமன்வெல்த், இறுதியாக ஒலிம்பிக்ஸ் என்று கலந்து கொள் ளும் அளவுக்கு இவனைத் தயார் செய் வேன்" என்கிறார் முனியாண்டி. "ஒலிம் பிக்ஸ்தான் லட்சியம் அங்கிள்" என்றபடி தடாலென்று குளத்தில் குதித்து கடுமை யான பயிற்சியைத் தொடர்கிறான் வெங்க டேஸ்வரன். தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு வாரியம் வெங்கடேஸ்வரனுக்கான செலவுகளை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

- ப்ரியன்

படங்கள்: மீடியா ராமு



கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றதோ அப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு சுழல் கோப்பை உங்கள் பள்ளி பெற வேண்டுமானால் உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். இன்னும் மூன்று மாதங்களே உள்ளன. வெல்லப் போவது எந்தப் பள்ளி?


கோடி ரூபாய்க்குப் பாராட்டுக் கிடைக்குமா?

தகவல்: ராஜி ராதா

படம்: சேகர்



தகுதி



சுந்தராபுரி நாட்டு மன்னர் விக்ரம சிம்மன் மரணப் படுக்கையில் இருந்தார். அவருக்கு மூன்று மகன்கள். தேவன், மாறன், தீரன் மூன்று பேருமே ஒவ்வொரு விதத்தில் அறிவிலும் திறமையிலும் சிறந்து விளங்கினார்கள். அதுதான் மன்னருக்குக் கவலையாக இருந்தது. யாரை ராஜாவாகத் தேர்ந்தெடுப்பது? அதற்குத் தகுதியானவர் யார்?

எப்போதும் இந்தக் கேள்வி அவர் மனதைக் குடைந்து கொண்டே இருந்ததால் நாளுக்கு நாள் உடல் நிலை மோசமடைந்து கொண்டே போனது.

அரண்மனை வைத்தியரைத் தவிர பக்கத்து நாட்டிலுள்ள வைத்தியர்கள் கூட வந்து பார்த்து, மருத்துவம் செய்து விட்டுப் போனார்கள். ஆனால் அவருக்கு நோய் உடம்பிலில்லை. மனதில் தான் என்பது அரசவையின் ஆஸ்தான குருவுக்குப் புரிந்தது. மன்னரைப் பார்க்க வந்தார்.

"மன்னா! தங்கள் கவலைக்கான உண்மையான காரணம் என்ன என்று நான் அறிவேன். இந்த நாழிகை முதல் நீங்கள் கவலைப்படுவதை விட்டொழியுங்கள். உங்கள் கவலையைத் தீர்க்க வேண்டியது என்னுடைய கடமை. இளவரசர்களை என்னுடன் அனுப்பி வையுங்கள். சிறிது நாட்களுக்குப் பிறகு அழைத்து வருகிறேன். தங்கள் கவலையைத் தீர்க்கும்படியான நல்ல பதிலோடு வருகிறேன்."

ராஜகுருவின் வேண்டுகோளுக்கு சம்மதித்த மன்னரும் மைந்தர்களை அவ

யாருக்கு?

✪ கே.பரத் ✪

ஆறாம் வகுப்பு, ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக் பள்ளி, ஓசூர்

ரோடு அனுப்பி வைத்தார்.

தேவன், மாறன், தீரன் மூவருக்கும் இருக்கும் திறமையைக் கண்டுபிடிப்பது கொஞ்சம் கஷ்டம்தான் என்பதை ராஜகுரு உணர்ந்துதான் இருந்தார்.

அவருடைய ஆசிரமத்தில் இளவரசர்களுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் செய்து கொடுத்தார். அவர்களை இஷ்டப்படி சுதந்திரமாக உலாவ விட்டாலும் மறைமுகமாக அவர்களைக் கண்காணித்துக் கொண்டே வந்தார்.

மறுநாள், தெருவில் ஒரு நவரத்ன வியாபாரி போய்க் கொண்டிருந்தார்.

அப்போதுதான் ராஜகுருவுக்கு அந்த யோசனை தோன்றியது. இளவரசர்களைப் பார்த்து ஏதோ சொன்னார். அடுத்த நாள் இளவரசர்களை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றார்.

மன்னருக்கு ஒரே ஆச்சர்யம்!

"ராஜகுருவே! இளவரசர்களை சில நாட்கள் பரிசோதனைக்காக அழைத்துச் செல்வதாக சொல்லிவிட்டு இப்போது இரண்டே நாட்களில் திரும்பி விட்டீர்கள். என்ன

அழ. வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை



ஆயிற்று?"

"நீங்கள் கூறியபடியே எல்லாம் நல்லபடியாக முடிந்தது மன்னா."

"எப்படி? எப்படி? விபரமாகச் சொல்லுங்கள்!" மன்னரால் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"நேற்று நவரத்ன வியாபாரி ஒருவர் என் வீட்டுக்குச் சற்றுத்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

ஜூலை இதழில் அறிவித்த போட்டி மிகவும் சுலபமாக இருந்திருக்கிறது. அதனால் பங்கேற்றவர்களின் எண்ணிக்கையும் அதிகம். சரியான விடை அளித்தவர்களில் இருந்து குலுக்கல் முறையில் ஐந்து பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



பரிசு பெற்றவர்கள்:

1. த. சாருமதி, பத்தாம் வகுப்பு, உடையார்குடி, காட்டுமன்னார்கோயில்.
2. பா. கௌரி சங்கர், ஒன்பதாம் வகுப்பு, தஞ்சாவூர்.
3. பி. நிரஞ்சன்ராஜ், எட்டாம் வகுப்பு, உள்ளகரம் சென்னை.
4. பி. வெங்கடேஷ் பிரசன்னா, நான்காம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி.
5. அ. மைதிலி, ஆறாம் வகுப்பு, ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயா, ஆற்காடு.

சரியான விடை:

1. ஹவானா, 2. ஸ்பானிஷ், 3. பெசோ, 4. கரும்பு, 5. கரிபியன் கடல், 6. கியூபா

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

தள்ளி போய்க் கொண்டிருந்தார். நான் வேண்டுமென்றே அவரைச் சற்று தூரம் போக விட்ட பிறகு இளவரசர்களிடம்,

"உங்களுக்கு ஒரு பரிசு கொடுக்க விரும்புகிறேன். அந்த வியாபாரியை அழைத்து வாருங்கள். ஹாரம், மோதிரம் எது வேண்டுமானாலும் அவரிடம் வாங்கிப் பரிசாகத் தருகிறேன்' என்று சொன்னேன். உடனே மூத்த இளவரசர் தேவன்,

"ஏய் மாறா! தீரா! இரண்டு பேரும் அவரை அழைத்து வாருங்கள் என்று தான் உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமல் தம்பிகளுக்கு உத்தரவு போட்டார்.

"இருவரும் வெளியே போய் கொஞ்ச நேரத்தில் தீரன் மட்டும் திரும்பி வந்தார்.

"தீரன், 'அண்ணா! நாங்கள் போவதற்குள் இன்னொரு வீட்டில் அந்த வியாபாரியைக் கூப்பிட்டு விட்டார்கள்' என்றான்.

"டேய் மடையா! அவர் என்னென்ன கொண்டு வந்திருக்கிறார் என்று பார்த்து வருவதுதானே!" என்று சொன்ன அடுத்த நிமிடம் தீரன் போய்விட்டார். சற்று நேரம் கழிந்து வந்தார். நகைகளின் பட்டியலையும் நவரத்னங்களின் விபரத்தையும் வந்து சொன்னார்.

"அந்த வீட்டில் என்ன விலைக்கு வாங்குகிறார்கள் என்பதை கவனித்து வந்திருக்கலாமே? அப்புறம் எந்த ஊர், எந்த நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட நவரத்னங்கள்?" என்று ஒவ்வொன்றாகக் கேட்க ஒவ்வொரு முறையும் போய்ப் போய்க் கேட்டுக் கொண்டு வந்தார்.

"மாறன், சற்றுத் தாமதமாக வந்தார். தாமதத்திற்கு காரணம் கேட்க, தேவன் தீரனிடம் கேட்டுக் கொண்டு வரச் சொன்ன தகவல்களைத் தவிர மேலும் சில தகவல்களையும் அறிந்து கொண்டு வர தாமதமாகி விட்டதாகக் கூறினார்.

"இப்போது புரிகிறதா மன்னா? என் வேலை சுலபமாக முடிந்ததால் இன்றே திரும்பி விட்டோம். சரி, இந் நேரம் தாங்கள் யூகித்திருப்பீர்களே? யார் யாருக்கு என்ன பதவி தரலாம் என்பதை!

மன்னர், தன் நோய்க் கொடுமையையும் மறந்து வாய்விட்டுச் சிரித்தார்.

"தான் உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமல் மாறனையும் தீரனையும் உத்தரவுகள் இட்டு வேலை வாங்கிய, தகவல்களைத் தெரிந்து கொண்ட தேவன் அரசனாக அரசாளத் தகுதி பெறுகிறான்.

"சொன்ன வேலையை அலுப்பு, சலிப்பு இல்லாமல், தட்டாமல் செய்ததால் தீரன் தளபதியாக பொறுப்பு ஏற்கிறான்.

"தமையன் கேட்டுக் கொண்டு வரச் சொன்ன தகவல்களைத் தவிர மேலும் தேவையான தகவல்களையும் தன் மதி யூகத்தால் சேகரித்துக் கொண்டு வந்த மாறன், மந்திரியாகும் தகுதி பெறுகிறான். சரிதானா ராஜ குருவே?"

மன்னருடன் சேர்ந்து ராஜ குருவும் சிரித்தார். மன்னரின் கவலை நீங்கி சீக்கிரமே உடல் நலம் பெற்றார். நல்ல ஒரு நாளில் மூன்று பேருக்கும் அவரவருக்கு உரிய பொறுப்பை ஒப்படைத்தார். வயதாக ஆக அனுபவமும் கூடி, சிறந்த முறையில் இளவரசர்கள் ஆட்சி செய்தார்கள்.



ஆசிரியர்கள் தினம்

கவர் ஸ்டோரி

மனிதனை மனிதனாக்குவது கல்வி. அதனால்தான் அந்தக் கல்வியைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களை மாதா, பிதாவுக்கு அடுத்து குரு என்று சொல்லியிருக்கிறார்கள். இது முற்றிலும் உண்மை. ஒவ்வொரு மாணவருக்கும், அவர்களது எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது என்பதை அவர்களின் கல்வித்தரமே நிர்ணயிக்கிறது. இதில் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானது. ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் என தொடர் சங்கிலியாக உறவு இருந்தால்தான் ஒரு சிறந்த மாணவ, மாணவியை உருவாக்க முடியும்.

ஆசிரியர் பணி ஓர் அறப்பணி என்பார்கள். ஆசிரியர்கள் நிறையப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு, சேவை மனப்பான்மையில் கல்வி அளித்து வருகிறார்கள்.

நம் நாட்டின் முதல் ஜனாதிபதி டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் ஒரு புகழ் பெற்ற ஆசிரியர். அவர் பதவியேற்றவுடன் அவரது பிறந்த நாளான செப்டெம்பர் 5ஐ அவரது நண்பர்களும் மாணவர்களும் கொண்டாட விரும்பினர். ராதாகிருஷ்ணன் தனது பிறந்த நாளை ஆசிரியர்கள் தினமாகக் கொண்டாடும்படி கேட்டுக் கொண்டார். அன்றுமுதல் செப்டெம்பர் 5 ஆசிரியர்கள் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் 25,000 மணி நேரம் கல்விக்கூடங்களில் செலவழிக்கிறான். எனவே மாணவர்களின் நிறை, குறைகள் அனைத்தும் ஆசிரியர்களைத் தவிர யாருக்குத் தெரியும்?

ஆசிரியர் என்பவர் கேள்வி கேட்பவர், மாணவர்கள் பதில் சொல்கிறவர்கள் என்று இல்லாமல் மாணவர்களை நிறையக் கேள்விகளைக் கேட்கச் செய்து, சிந்தனையைத் தூண்டுபவரே சிறந்த ஆசிரியர்.

எல்லோருக்கும் எல்லா விஷயமும் தெரியாது. தெரிந்த விஷயங்களை மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டு, அவர்களிடம் உள்ள விஷயங்களை ஆசிரியரும் கற்றுக் கொள்பவரே சிறந்த ஆசிரியர்.

ஆசிரியரைப் பற்றி மாணவர்களிடம் பயம் நிலவாமல், தோழமை உணர்வுடன்



பழகுபவரே சிறந்த ஆசிரியர்.

குழந்தைகளையும், ஆசிரியர் பணியையும் நேசித்து, மாணவர்களின் சிறந்த எதிர்காலமே தங்களது லட்சியமாகப் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஆசிரியர் தின வாழ்த்துகள்!

அட்டையில்: பவித்ரா
அட்டைப்படம்: ஸ்ரீஹரி

OLYMPICS FEATURES

PUZZLE ON HARRY POTTER



HOW AIRPLANES WORK

COVER STORY

ON LITERACY DAY



HURRY! BOOK YOUR COPY TODAY

GOKULAM

The magazine for children

September 2004

Rs.8

For Subscriptions mail to :Gokulam, Kalki Buildings,
47 NP Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 097
E-mail:subscription@kalkiweekly.com

பத்து வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்!





விடைகள்:
1. டிரம் ஸ்டிக், 2. குள்ளனின் கண், 3. முயல் மீசை 4. முயல் காது வண்ணம், 5. பட்டாசு ஒளி, 6. மரம், 7. வாத்தின் கை பட்டன், 8. டிரம் கயிறு, 9. பூனை வால், 10. முயல் கால்



கட்டுரை

மின் ஒளியின் கதை!

இரவில் திடீரென 10 நிமிடம் மின்வெட்டு ஏற்பட்டுவிட்டால் நம்மால் தாங்க முடிவதில்லை. இருளில் அல்லாடுகிறோம். மின் வாரியத்தை அர்ச்சிக்கிறோம். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதர்கள் நிலவு எட்டிப் பார்க்காத இரவில், எப்படி உலவியிருப்பார்கள் என எண்ணிப் பாருங்கள். இன்னும்கூட, இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலும், மின் விளக்கையே அறியாத கிராமங்கள் இந்தியாவில் உள்ளன. இருட்டில் உலவிய மனித இனத்துக்கு 'தீ' ஒரு வரப் பிரசாதம். தீ வெளிச்சமாகவும், உணவு சமைக்கவும் பயன்பட்டது! 'இந்தத் தீயை விளக்காக மாற்றுவோம்' என்று அன்றைய மனிதனுக்குத் தெரியாது.

பழுக்கக் காய்ச்சிய இரும்போ, உலோகமோ, வெப்பத்தையும் வெளிச்சத்தையும் உமிழும் என்று அறிந்தனர். மின்தடை உடைய கம்பிகள் அமைக்க முடியும் என விஞ்ஞானிகள் உணர்ந்தனர். மின்விளக்கு அமைக்கும் முயற்சியில் பலரும் முயன்றாலும் 1812ல் வெற்றி பெற்றவர் ஹம்ப்ரிடேவிதான். இது அக்காலத்தில் மின் வில் (Electric arc) எனப்பட்டது. பின்னர் அவரே பிளாட்டினம் இழை மூலம் மின்விளக்கை அமைத்தார். பிளாட்டினத்தின் விலை அதிகமாக இருந்ததால் அனைவராலும் அதனை வாங்க முடியாததால், இதற்கு மக்களிடையே அவ்வளவு வரவேற்பு இல்லை! வெற்றியும் கிட்டவில்லை. மேலும் பிளாட்டினம் விளக்கின் ஆயுளும் குறைவு!





உலக மக்கள் அத்தனை பேர் வாழ்க்கையிலும் விளக்கேற்றி ஒளியூட்டியவர் தாமஸ் ஆல்வா எடிசன்தான்! அவர்தான் நாம் இன்று பயன்படுத்திக் கொண்டிருக்கும் மின் விளக்கைக் கண்டுபிடித்தவர். 1860ல் சர் ஜோசப் வில்சன் ஸ்வான் என்பவர் கார்பன் இழையுள்ள மின்விளக்கைத் தயாரித்தார். 1877ல் ஜோசப் ஸ்வான் என்ற ஆங்கிலேயர் பல்பைக் கண்டுபிடித்தார். அதில் நிறைய குறைபாடுகள் இருந்ததால், அவற்றையெல்லாம் சரி செய்த எடிசன் அவருடன் இணைந்தே, இன்றைய குண்டு பல்பை உருவாக்கினார். பின்னரே 1878ல் சார்லஸ் பிரான்சிஸ் பிரஷ் என்ற அமெரிக்கர் வணிக ரீதியில் பணம் குவிக்கும் மின் விளக்கைச் செய்தார். இவற்றில், மின்விளக்கிற்குள் எரியும் உலோக இழை பெரிய பிரச்னையாகவே இருந்தது. மின்சாரத்தை எந்த இழையில் செலுத்தி நீண்ட ஆயுள் உள்ள பல்பை உருவாக்கலாம் என்று... விதம் விதமான உலோகங்கள், பல வகையான மரப்பட்டைகள், நார், தலை முடி போன்றவற்றில் தனது முயற்சிகளைத் தொடர்ந்தும், எடிசனுக்கு வெற்றிகிட்டவில்லை. இதற்காக தன் உதவியாளர்களை அமேசான் காடுகளுக்கும், ஜப்பான் கடற்கரைக்கும் அனுப்பினார்.

இச் சோதனைகளைச் செய்து கொண்டிருக்கும்போதே, ஒருமுறை ஸ்டவ்

மோகனா

வெடித்து, எடிசனின் சோதனைக் கூடத்தையே ஒளிப்பிழம்பாக்கியது! இருப்பினும் மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்து 1201 ஆம் முறையாக பருத்தி நூல் இழையைக் கண்ணாடி கலத்தில் நுழைத்து அதில் மின்சாரத்தைச் செலுத்தி எரிய வைத்து இரவைப் பகலாக்கும் வித்தையைச் செய்தார். ஒளியும் பிறந்தது! அதன் பிறகு, கார்பன் இழையுள்ள எடிசன் விளக்கு உலகம் முழுவதும் பிரபலமானது. இது 40 மணி நேரத்துக்கும் அதிகமாய் ஒளி தந்தது. இப்போது நாம் பயன்படுத்தும் வெண்சுடர் விளக்குகளின் வாழ்நாள் 3000 மணி நேரம்.



* கலங்கரை விளக்கம்



* தாமஸ் ஆல்வா எடிசன்

கார்பனுக்குப் பதிலாக ஆஸ்மியம், டாண்டலம் கம்பிகளைப் பயன்படுத்தி மின் விளக்கு தயாரிக்கப்பட்டது. பின் 1907ல் 'டங்ஸ்டன் இழை'யை மின் விளக்குகளில் செலுத்தினர். இது ஒளி அதிகம் தருவதுடன், நீண்ட ஆயுளுடனும் இருந்தது. டங்ஸ்டன் இழையை வெற்றிடத்தில் வைப்பதற்குப் பதில் நைட்ரஜன், ஆர்கான் போன்ற மந்த வாயுக்களாலும் மின்விளக்கின் ஆயுள் அதிகரித்தது. தரமான டங்ஸ்டன் இழையை 1910ல் வில்லியம் டேவிட் கூலிட்ஜ் தயாரித்தார். 1913ல் அயோடின், புரோமின் போன்ற வாயுக்களைப் பயன்படுத்தினால் இன்னும் நிறைய நாட்கள் பல்ப் உழைக்கும் என அறிந்தனர். இவற்றில் தற்போது 'கிரிப்டான்' வாயுவே நிரப்பப்படுகிறது.

பாதரசத்தை ஆவியாக மாற்றி, கண்ணாடிக் கலத்துள் நுழைத்து மின்சாரத்தைச் செலுத்தினால், அதிலிருந்து வரும் ஒளி நீலம் கலந்த வெண்மையுடன் திகழும். இதுவே பாதரச ஆவி விளக்கு! இவ்வொளியின் புற ஊதாக் கதிர்கள் மருத்துவ ரீதியாகவும் பயன்படுகின்றன.

இதற்கிடையில் ஒளிர்விளக்குகளும் இவற்றுடன் போட்டியிட்டு நடமாடத் துவங்கிவிட்டன.

மின்வில் விளக்குகள் கலங்கரை விளக்கத்திலும், கார்பன் மின் விளக்கு இராணுவத்திலும், மின் விளக்குகள் நிழற்படத் தொழில், சினிமா புரொஜக்டர்களிலும் பயன்படுகின்றன. மின் விளக்குகளில் செலுத்தப்படும் சக்தி 92%க்கும் மேல் வெப்பமாகவும் 5%க்கு குறைவாகவே வெளிச்சமாகவும் வெளியேறுகிறது. ஒளிர் விளக்குகள் 60 - 80% மின்சாரத்தை ஒளியாக வெளி விடுகின்றன.

உலகத்தை ஒளியூட்டிய மேதை தாமஸ் ஆல்வா எடிசனை மரியாதை செய்வதற்காக, அமெரிக்கா அவர் இறந்த அன்று, நாடு முழுவதும் ஒரு நிமிடம் விளக்கை அணைத்தது. அப்போது மக்கள் எடிசன் இல்லாதிருந்தால், மின் விளக்கு இல்லையென்றால் இருட்டு எப்படி கொடுமையானது என்பதை உணர்ந்தனர்.



பனையைப் போல் வாழ்வோம்!

எம்.வி.குமார்

பார்க்கும் இடம் எல்லாமும்
பனை மரங்கள் தெரியுது
பாலை போன்ற இடத்தில்கூட
வானை நோக்கி வளருது

தலை விரித்த நிலையினிலே
ஓலை படர்ந்து இருக்குது
நிலை அறிந்து மனிதர்களுக்கு
நிறைய உணவு அளிக்குது

கோடை வந்தால் நுங்குகளோ
கொத்து கொத்தாய் தொங்குது
ஏழை செல்வர் பேதமின்றி
இன்பம் கூட்டித் தங்குது

வித விதமாய் அளவுகளில்
விட்டு தூலம் ஆகுது
ஏற்றம் போட்டு நீரிறைக்க
என்றும் நின்று உழைக்குது

பனை மரத்தில் ஒன்றுகூட
பாழ் ஆவது இல்லையே
பனையைப் போல நாமும் வாழ
பயனில் குறைவும் இல்லையே!


எத்தனை
வண்ணத்துப்
பூச்சிகள்?

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered no. TN/PMG (CCR) 496/03-05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304/03-05* Registered as a Newspaper in Srilanka
black

ICMAC
ABACUS ACADEMY - INDIA

"Explore the intelligence within"

I C MAC

International Chinese Mental Arithmetic Concept

An International Chinese program for your childs whole brain development in the age group of 4 - 14 years



Dear Parents,
Enroll your children in I C MAC where diamonds get their glitters.

PROGRAM ENHANCES

- Photographic Memory
- Listening Skills
- Concentration
- Creativity
- Speed & Accuracy
- Self -confidence
- Self -reliance
- All round Academic Proficiency

Affordable fees with high quality Abacus Education.

64758
98562
- 31490
19743
76355
?

7534 x 97 = ?

3682 / 42 = ?

Your children can solve these sums in seconds faster than the calculator.

Franchise Enquiries solicited

Contact
I C MAC Abacus Academy (India) Pvt. Ltd.,
Admin. Office: C-2, Barracks Arcade, # 64, Perambur Barracks Road, Purasaiwalkam, Chennai - 600 007
Phone: 91-44- 52042751 / 55383281 Mobile: 98403 93959
Regd. Office : I C MAC House, Chandigarh (U.T.) India.
Email: info@icmacindia.com / website: www.icmacindia.com

100% off* on Franchise Fee For 100 Centres all Over Tamilnadu
* Limited Period Offer. Conditions apply
* Allotment of Centres at the Sole Discretion of the Company.